உ

# அருள் ஒளி



## பிள்ளையார் பெருங்கதைச் சிறப்பு மலர்

வெளியீடு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை


2012


## சிலாபம் முன்னேஸ்வர சிவாலய தோற்றங்கள்



















உ



# அருள் ஒளி

**(மாதாந்த சஞ்சிகை)**

ஆசிரியர்
**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**
**உதவி ஆசிரியர்**
**சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்**

**நந்தன வருட பிள்ளையார் பெருங்கதைச் சிறப்பு மலர்**

**வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை, இலங்கை.** **பதிவு இல. : QD / 74 / NEWS / 2006Y**

## நல்லதோர் வீணை

அருள்வளம் நிறைந்த அற்புதப் பூமி யாழ்ப்பாணம். தவஞானிகள் பலர் தோன்றித் தர்மநெறி காத்த பூமி. இறைவழிபாட்டுக்கு முதன்மை கொடுத்தவர்கள் எம் சந்ததி. சிவாயநம என்று சிந்தித்து செழிப்புற்று எம் மூதாதையர் வாழ்ந்த திருநாடு. திருக்கோவில்கள் நிறைந்த திருநாடு. எத்தனையோ படையெடுப்புக்கள், பல மதங்களின் வருகை எதையும் துணிச்சலாக எதிர்கொண்டு வாழ்ந்தவர்கள் எம்முன்னோர். உடல் உள ஆரோக்கியம் உழைப்பு அனைத்திலும் அக்கறை கொண்ட பூரணத்துவம் மிக்க சமூகம் என வரலாற்றாளர் யாழ்ப்பாணச் சமூகத்தையொரு காலத்தில் பாராட்டினர். கடின உழைப்போடு கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள் இப்பிரதேச மக்கள் என ஆங்கிலேயர்கள் பலர் வரலாற்றுக் குறிப்புகளில் பெருமைப்படுத்தினர். எல்லாமே கண்ணூறுபட்டதுபோல்.... இன்று அதிகூடிய தொகை மதுபானம் விற்பனையாகும் பிரதேசமாக யாழ்ப்பாணத்தை விமர்சித்து செய்திகள் வந்தவண்ணமாக இருப்பது வேதனை தரும் செய்தியாகும்.

மேலும் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களிலொன்றாக யாழ்ப்பாணம் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது அறிந்து உலகெங்கும் வாழும் தமிழர்கள் அதிர்ச்சியடைந்திருப்பது அனைவரும் அறிந்ததே.

போரின் தாக்கம், அரசியல் சூழல் அந்தரநிலையில் எம்மண் அவலமுறுவது உண்மை. எனினும் மதுவுக்கு அடிமையாகும் சமூகத்தை நினைந்து வெட்கப்பட வேண்டியது எம் கடமையாகும். கடவுள் தந்த இனிய பிறவியை நன்முறையில் பயன்படுத்தி நல்வாழ்வு வாழ்தலே பிறவிப் பயனாகும். அநியாயமாக மதுவுக்கு அடிமையாகி தம்மை அழிக்கும் தீமை அறியாமையே. இவ்விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் அக்கறை எடுத்தல் அவசியமாகும். சகல நிலைகளிலும் மதுவுக்கு அடிமையாகும் தரப்பினரும்அக்கறை கொள்ளவேண்டும். தாய், தந்தை, ஆசிரியர், ஆன்மீகப் பெரியவர்கள் அனைவரும் மதுவுக்கு எம் சமூகம் அடிமையாகாமல் இருப்பதற்கு அவசர நடவடிக்கை எடுக்கவேண்டும். வாணிபர்கள் மது விற்பனை நிலையங்களைத் திறந்து மக்களை அழிக்கும் பாவச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும். மகாகவி பாரதியார் பாடிய பாவரிகள் பயனுள்ளவை.

நல்லதோர் வீணை செய்து அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ....

விரைவில் எம்மண்ணில் புனிதமான மனித சமூகம் உருவாக ஒன்றுபட்டு உழைப்போம்.

- ஆசிரியர்

**கிழக்கு நோக்கி அமர்ந்து உணவு உண்டால் ஆயுள் வளரம்**
**மேற்கு நோக்கி உண்டால் புகழ் சேரும்.**
**தெற்கு நோக்கி உண்டால் பொருள் வளரும்.**
**வடக்கு நோக்கி உண்டால் நோய் வளரும்.**

**- வாரியார்**

உ

# ஆறுமுக நாவலர்

**சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (ஜே.பி) அவர்கள்**

**நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே –எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேபிர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை.**

அறிஞர்களால் தான் ஒரு நாடு பெருமையடைகிறது. சோக்கிறற்றீஸ் தோன்றியதால் கிரேக்க நாடு நினைவில் வருகிறது. ஆபிரஹாம் லிங்கனால் அமெரிக்கா பெருமையடைகிறது. சுவாமி விவேகானந்தரால் பாரதநாடு போற்றப்படு கிறது. அதேபோல் நாவலர் பெருமானால் ஈழநாடு பெருமையடைகிறது. அவர் அவதரித்த காலம் யாழ்ப்பாண மக்கள் உண்மை அறிவிழந்து போலியில் மயங்கி அந்நியராட்சிக்கு அடிமைப்பட்டிருந்த ஒரு காலமாகும். இந்தச் சூழ்நிலையிலே சிந்தித்துச் செயலாற்றினார் நாவலர் பெருமான். அவர் எண்ணம் விரிந்து தாய் நாட்டிற்கும் சேய் நாட்டிற்குமிடையில் பேரிணைப்பை ஏற்படுத்தியது. சைவத்தை யோ தமிழையோ தனித்தனி வளர்ப்பது இயலாததென்று கண்டு இணைத்து ஒன்றாய் வளர்க்க வழிகாட்டினார். தானே வளர்த்துங் காட்டினார். இத்தகைய மகத்தான பணிபுரிந்த பெருமானுக்குச் சென்ற நூற்றாண்டில் சைவ உலகம் பாராட்டி நூற்றாண்டு விழாவையும் சிறப்பு மகா நாடுகளையும் நடத்தித் தம் நன்றியைத் தெரிவித்தது. நாவலர் அவர்கள் ஆற்றிய சேவையைச் சைவத் தமிழ் மக்கள் என்றுமே மறக்கமுடியாது.

## இளமைப் பருவத்திலே மேதாவி

கருவிலே திருவுடையவராக அவ தரித்த 'நாவலர்' அவர்களுடைய பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பதாகும். இவர் களின் முன்னோர்கள் சைவப் பற்றும் சீவகாருண்யமும் உடையவர்கள். அவர் களில் ஒருவரான ஞானப்பிரகாசர் என்ப வரே பசுக் கொலைக்கு அஞ்சி இரவோடிர வாக யாழ்ப்பாணத்தை விட்டு இந்தியா வுக்குச் சென்றவராவார். அங்கு சிதம்ப ரத்தின் கண்ணே எழுந்தருளியுள்ள தில்லையம்பலவரை வணங்கித் தமது மரபில் ஒரு சற்புத்திரர் தோன்றி இந்த நிட்டூர நிலையை நீக்கிச் சைவ மக்களுக்கு விமோசனமளிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார். அவ்வழிபாட்டை ஏற்றுக் கொண்ட இறைவன் அருளினாற்றான் ஆறுமுகம் 1822இல் நல்லைநகரில் அவ தரித்தார். இளமையிலேயே மேதா விலாச முடையவராகவும் கூர்ந்த மெய்ஞ்ஞான முடையவராகவும் விளங்கினார். தந்தை யார் கந்தப்பிள்ளை சிறந்த அறிஞர்; கலைப் பிரியர். அவர் பாடிக் குறையிலே விட்டுச் சென்ற நாடகத்தை ஆறுமுகம் ஒன்பதாம் வயதிலேயே பூர்த்தி செய்தார். வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழி களையும் ஐயந்திரிபறக் கற்றார்.

அன்று ஆங்கிலக் கல்வி கற்கும் வாய்ப்பு மிஷனரிமாருடைய கல்வித் தாபனங்களிலேயே கிடைத்தது. அங்கேயே சேர்ந்து ஆங்கிலக் கல்வியகைக் கற்று

வித்தகத் தன்மையைப் பெற்றதுமன்றித் தமிழ்ப் பண்டிதராகவும் அங்கு கல்வி கற்பிக்க அமர்த்தப்பட்டார். இதே காலத்தில் பார்சிவல் துரையினுடைய பாராட்டு அவருக்கு நிரம்பக் கிடைத்தது. விவிலிய நூலைத் தமிழிலே மொழி பெயர்க்கும் பணியில் பெரும் புகழீட்டினார். இதனால் கிறிஸ்தவர்களும் இவருடைய வித்து வத்தைப் போற்றினார்கள். பார்சிவல் பாதிரியார் அவர்கள் தமக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசானாக நாவலர் அவர்களை ஏற்றுக்கொண்டார்.

**பேச்சாற்றல்**

தமிழ் இலக்கண, இலக்கிய நூல் களையும் வேதாகம புராணங்களையும் கசடறக் கற்ற சிறப்பினால் பிழையற எழுதவும் நன்றாகப் பேசவும் ஆற்றலுடைய வரானார். இவருடைய பேச்சாற்றலை வியந்த திருவாவடுதுறை மகாசந்நிதான மவர்கள் கற்றாரவைக்கண் 'நாவலர்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தார்கள்.

*"ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர்*
*வார்த்தை பதினாயிரத் தொருவர்"*

என்று சொல்வது வழக்கம். வாக்கு வன்மை சாதாரணமாக எல்லோருக்கும் கிடைக்கும் பேறு அல்ல. நாவன்மை மிக்க நாவலர் அவர்கள் சென்ற நூற்றாண்டில் 'பிரசங்கம்' என்ற நிகழ்ச்சியை ஆலயங் களில் தொடக்கி வைத்தார். அன்று பாலர் முதல் விருத்தர் வரையிலும் பண்டிதர் முதல் பாமரர் வரையிலும் இவர் சொற் பொழிவுகளைக் கேட்டுப் பயனடைந் தனர். நூற்றுக்கணக்கான நூல்களை விழுந்து விழுந்து படித்தாலும் அவற்றில் உள்ள கருத்துக்கள் பலர் மனதிற் பதியமாட்டா. இக்குறைபாட்டை ஓரளவு சொற்பொழிவுகளால் நீக்கலாம் என்பதை நாவலர் பெருமான் செய்து காட்டினார். வேதாகம உண்மைகளையும் புராண சாரங்களையும் விளக்கிச் சிவநெறியின் தொன்மையும் சிவபரம்பொருளின் பேரருட் திறனும் விளங்கச் சொன்மாரி பொழிந்தவர் இவர். இவருடைய சொற் பொழிவில் பக்தி, வீரம், சோகம், நகைச்சுவை, வியப்பு யாவும் ஒருங்கே கலந்து மிளிரும். இவருடைய விரோதி களும் தம்பகை மறந்து கைகட்டி வாய் புதைத்து வாளாவிருந்து பிரசங்கங்களைக் கேட்டனர் என்பதை நாம் அறிகிறோம்.

*சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது*

என்றார் வள்ளுவர். சைவமென்னும் பயிரை வளர்க்கப் பிரசங்கம் என்னும் மழையைப் பெய்விக்க வேண்டும் என்பது தான் அவர் கண்ட புதுவழி. இதன்படி வெள்ளிக்கிழமைகள் தோறும் யாழ்ப் பாணத்து வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் பிரசங்கம் செய்து வந்தார். இவரது பிரசங்கத்தால் நன்மையடைந் தோர் மிகப்பலர். ஆனால் சொல்லுதல் எளிது சொல்லியபடி நடப்பதுதான் மிக வரிது என்பர். நாவலர் அவர்களோ தான் எதனை அனுட்டித்தாரோ அதனையே மற்றவர்களுக்குச் சொன்னார். மாமிச போசனமும் மதுபானமும் மனிதனை அரக்கனாக்குவது என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டி விளக்கினார். இதனைக் கேட்டு மனந்திரும்பிய பலர் அத்தீய பழக்கத்தைக் கைவிட்டனர். வீண ரோடு கூடித்திரிந்து தமது நேரத்தை அவப் பொழுதாகக் கழித்த பலர் இவர் சொற் பொழிவுகளைக் கேட்பதில் காலத்தைப்

பயனுடையதாக்கினர். ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் இவர் தொடர்ந்து பிரசங்கங்கள் செய்தார். தமிழகத்திலும் சைவப் பிரசங் கங்கள் பலவற்றை ஆற்றியபோது சித் தாந்த தெளிவையும் செந்தமிழ் நடையையும், பக்திச் சிறப்பையும் ஒருங்கே கண்டு பலர் வியந்தனர். இவருடைய பேச்சில் இலக்கண வழுக்கள் மருந்துக்குமில்லை. சொற்பஞ்ச மின்றி எவருக்கும் விளங்கப் பேசும் ஆற்றல் அக்காலத்தில் வேறெவரிடமும் காண முடியாமலிருந்தது.

நெற்றிக் கண்ணைக் காட்டியபோதும் உன்பாடல் குற்றமே குற்றம் என்று எடுத்துக் கூறிய நக்கீரர் பரம்பரையில் வந்தவர்தான் நமது நாவலர் பெருமான். குற்றங்கண்ட வழி எவரையும் கண்டித்துப் பேசுந் தன்மை இவருக்குண்டு. ஆனால் கண்டிக்கப்பட்டோர் திரும்ப இவரை எதிர்த்துப் பேசியதே கிடையாது. ஏனெனில் அழகும் சாதுரியமும் மிக்க அவரின் கண்டிக்கும் முறையில் அவர்கள் அடங்கியிருந்தனர். இதனால் கேட்பவர் யாவரும் மதுவுண்டு மயங்கும் மதுகர மொப்ப மயங்கி விடுவர். சைவத்தை இழித்தும் பழித்தும் பாதிரிமார் போதனை செய்தனர். அதனை ஏற்று அடிமை வாழ்வைப் பல தமிழ் மக்கள் மேற் கொண்டு சிறிய சலுகைகளை நோக்கிப் பெரியதோர் பண்பாட்டை இழந்து நின்றனர். இவர்களை ஆணித்தரமான முறையிற் கண்டித்தார் நாவலர். இதனால் பாதிரிமார் வாயடைத்ததுமல்லாமல் நெறிமாறிய தமிழரும் சைவத்துக்குத் திரும்பினர். இதே நேரத்தில் நாவலரைப் பலர் எதிர்த்ததுண்டு. அந்த எதிர்ப்பின் மத்தியிலேயும் 'சிவனுண்டு பயமில்லை' என்று வாழ்ந்தவர் நாவலர்.

## எழுத்துப் பணி

அடுத்து அவருடைய எழுத்துப் பணி யைக் கவனிப்போம். கிறீஸ்தவ குருமார்கள் தமது மதத்தைப் போதிப்பதற்கும் பரப்பு வதற்கும் எவ்வாறு பிரசுரங்களை வெளி யிட்டார்களோ அவ்வாறே சைவத்தைப் பரப்புதல் நலமெனக் கண்டார் நாவலர். திருமுறைகளின் சாரத்தையடக்கியும் சைவ சித்தாந்த உண்மைகளை விளக்கியும் பாலபாடம், சைவவினாவிடை முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். செய்யுள் நடையில் இருந்த பெரியபுராணம் திரு விளையாடற் புராணம், கந்தபுராணம் என்பவற்றை வசனநடைக்கு மாற்றினார். அடியார் பெருமையையும் திருத்தொண் டின் மகிமையையும் விளக்கிப் பெரிய புராண சூசனம் என்ற நூலை ஆக்கினார். சிவாலய வழிபாட்டு முறைகள் இவர் நூல்களால் மிகத் தெளிவாக்கப்பட்டன. நன்னூற் காண்டிகையுரை, இலக்கணச் சுருக்கம் என்பனவும் உயர்தர வகுப்பு மாணவர்க்கேற்ற முறையில் வெளியிடப் பட்டன. ஏடுகள் பலவற்றையும் துருவி ஆராய்ந்து திருக்கோவையார் முதலிய பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த பெருமையும் இவரையே சாரும். நாவலர் பதிப்பு ஒன்றே பிழையில்லாத பதிப்பு என்ற பெயர் அன்றும் இன்றும் நிலவுகிறது. தமிழில் இனிய வசனநடையைத் தொடக்கி வைத்த பெருமையும் நாவலருக்கேயுண்டு.

**அன்னநடை பிடிநடை அழகுநடை**
**யல்லவென அகற்றி அந்நாட்**
**பன்னுதமிழ்ப் புலவரிம் செய்யுணடை**
**பயின்ற தமிழ்ப்பாவை யாட்கு**
**வன்னநடை வழங்குநடை வசனநடை**
**எனப் பயிற்றி வைத்த ஆசான்**
**மன்னுமருள் ஆறுமுக நாவலன்றன்**
**ஒழுக்கநடை போல வாழி**

என்று பாராட்டினார் யாழ்ப்பாணத்து நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர். இன்னும் 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனவும் போற்றப்பட்டார். தமிழ்வசன நடைக்குப் புதுவடிவங் கொடுத்ததோட மையாது தரிப்புக் குறிப்புக்களையும் இட்டுப் புதுமை செய்தார். முதன் முதல் இப்பணியில் ஈடுபட்டவர் இவரே. சொற் களையோ, சொற்றொடர்களையோ வசனங் களையோ பிழையின்றி எழுதுவதிலும் பதிப்பிப்பதிலும் இவருக்கு நிகர் இவரே.

## நிறுவனங்கள்

சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பணி ஆற்றவேண்டுமானால் அச்சுக்கூடங்களை அமைத்து நூல்களை வெளியிட வேண்டும் என்றும் அவருடைய சிந்தனையில் பட்டது. இதற்கான நிதியைத் திரட்டுவதிலும் பெரும்பாடுபட்டார். அயரா உழைப்பின் பேரில் வண்ணார்பண்ணையிலும், சிதம்ப ரத்திலும் வித்தியாசாலைகளை அமைத்து அச்சுக்கூடங்களையும் நிறுவினார். இறைவன் அருளால் அவ்வப்போது இதற்கான பண உதவி கிடைத்தது.

1850ஆம் ஆண்டு முதன் முதல் இலவசக் கல்வியைத் தொடக்கி அளித்த மகான் நாவலர் அவர்களே. இந்த நிறுவனங்களின் மூலம் வருடாவருடம் தமிழையும் சைவத்தையும் முறையாகப் போதிக்கக்கூடிய போதக ஆசிரியர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் தோன்றினர். இன்றும் அந்தக் கல்விப் பரம்பரையிலே வந்த ஒரு சிலரே இப்பணியில் உழைத்து வருகின்றனர் என்றால் அதில் மிகை யொன்றுமில்லை. அவராக்கிய நிறு வனங்கள் இன்றும் பெரும்பணி ஆற்றி வருவது கண்கூடு.

## எமது குரு

நாவலர் பெருமானைச் சென்ற நூற்றாண்டிலே நம் நாட்டிலே அவதரித்த 'ஐந்தாம் குரவர்' என்ற பலரும் போற்று வர். இதனால் வருடாவருடம் மார்கழித் திங்களில் இவருடைய குருபூசை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இன்று வெண்ணீறு பூசுவோர், விரதமனுட்டிப்போர், திருவிழா எடுப் போர், பிரசங்கம் செய்வோர், புராண படனம் ஆற்றுவோர் யாவரும் நாவலர் ஐயா அவர்களின் வழியையே பின்பற்றிச் செல்கின்றனர். அவரே எமக்குக்குரு. அவர் நால்வர் வழியில் நின்றதுமன்றி நிற்கவும் எமக்கு வழிகாட்டியவர். அவ ருடைய சமயமுறையைப் பற்றி மகாவித்து வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் கூறுகிறார்.

**கருள்விரவு தலைக்கழிக்கும்**
**கண்மணியும் வெண்ணீறும்**
**பொருள்விரவும் ஐந்தெழுத்தும்**
**பொருளாகக் கொண்டுவப்போன்**
**தெருள் விரவு சுத்தசைவ**
**சித்தாந்தப் பெருஞ்செல்வன்**
**அருள் விரவு பரவுபுகழ்**
**ஆறுமுக நாவலனே.**

நமது நால்வர் பெருமக்களும் இதே வாழ்க்கையையே வாழ்ந்தார்கள். சைவத்தை நிலைநாட்டினார்கள். திரு முறைகளைத் தந்தார்கள். சிவாலய தரிசனம் செய்தார்கள். மறுசமயத்தின் தாக்குதலைத் தடுத்தார்கள். அரசியல், சமுதாயம் என்பவற்றிற் புகுந்து நல் நெறிக்கு வழிகாட்டினார்கள். இதே வரிசையில் பெரும்பணி ஆற்றியவர் நாவலர் ஐயா அவர்கள். பெரும்பஞ்

சத்தைப் போக்குவதற்காக கஞ்சித் தொட்டித் தருமம் ஒன்றை ஏற்படுத்தினார். இதனால் பலர் பட்டினி தீர்ந்து நல மடைந்தனர். நாட்டிலே கொடிய கொள்ளை நோய் தோன்றி மக்கள் உயிரை வதைத்த போது உடனடியாக அதனை அரசிய லாருக்கு அறிவித்து ஆவன செய்து நாட்டுநலனைப் பேணி மக்களுக்கு வாழ்வு கொடுத்தார். தமிழ்ப் பெருந் தலைவராகச் சேர். பொன். இராமநாதனைச் சட்ட சபைக்கு அனுப்பி வைத்தார். இவ்வாறு மகத்தான சமூகப் பணிகள் ஆற்றி சமுதாய நலனைக் கண்ணுங் கருத்து மாகப் பேணியவர் அவர்.

நாவலர் வழியில் நாமும் சென்று சைவத்தையும் தமிழையும் பேணி நாட்டு மக்கள் உள்ளத்திலே தூய வாழ்வை நிறுவுவதற்கு வழிகாண்போமாக!

**ஆரூர னில்லைப் புகலியோர்கோனில்லை அப்பனில்லைச்**
**சீருரு மாணிக்கவாசக னில்லைத் திசையளந்த**
**பேருரு மாறுமுக நாவலனில்லைப் பின்னிங்கியார்**
**நீருரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும் நீர்மையரே.**

# சக்தி வழிபாடு

*உலக நாயகியான சக்தி பல திருவுருவங்களாக காட்சி தருகிறாள். ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது நடராஜப் பெருமானின் திருநடனம் எம் பெருமான் அம்பிகையின் பக்கம் நோக்கி ஆடுகிறார்.*

*"மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே*
*ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனார்"*
*எனச் சேக்கிழார் சுவாமிகள் போற்றுகிறார்*

*தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்து மதம். "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை", "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்", "மாதா, பிதா, குரு, தெய்வம்" எனத் தாயை எல்லாவற்றுக்கும் மேலாக எண்ணிப் போற்றினார். சக்தியை ஐந்து வகையாகப் பிரித்து நோக்கலாம்.*

| | | |
|---|---|---|
| *போக சக்தி* | – | *பராசக்தி* |
| *வீரசக்தி* | – | *துர்க்கை* |
| *கோரசக்தி* | – | *காளி* |
| *அதிகாரசக்தி* | – | *நாராயணி* |
| *அருட்சக்தி* | – | *மனோன்மணி* |

# திருவருளினால் நமக்குக் கிடைத்தவர் நாவலர் பெருமான்

**இலக்கிய கலாநிதி**
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

'நாயனார் நாற்குரவர் நாவலர்தென்
ஞானமிசை மேயினார் ஈசனருண் மேல்'

என்று பாடுகின்றார் சி.வை. தாமோ தரம்பிள்ளை. நாயன்மார் சமய குரவர் சந்தான குரவர் போலவே திருவளினாலே நமக்குக் கிடைத்தவர் நாவலர் பெருமான் என்பது சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் கருத்து.

'நிழலின் அருமை வெயிலிலே தெரியும்' என்பது பழமொழி.

அப்பர் சுவாமிகள் சமண சமயத்தில் அகப்பட்டு ஒருவாறு தப்பிப்பிழைத்து விம்மல் பொருமலுடன் பழையபடி சைவத்துக்கு வந்தவர்.

தாமோதரம்பிள்ளை கிறிஸ்தவராய் மாறி, ஒருவாறு தப்பிப்பிழைத்து, நாவலர் என்ற தெப்பத்தை இறுகப் பற்றிக்கொண்டு பழையபடி சைவத்துறையை வந்து சேந்தவர்.

நாவலர் பெருமான் பிறவாதிருந்தால் தாமோதரம்பிள்ளை கொழுத்த கின்ஸ்பரிப் பாதிரியாராய் இருந்திருப்பார். தொல் காப்பியம் பதித்துத் தமிழ்த் தாமோதரம் பிள்ளையாதல் நினைக்க முடியாததாகும்.

'நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல்' என்ற பிள்ளைபாடிய பிரசித்திப் பாடல், நாவலர் பெருமானின் அருமையறிந்து உள்ளம் நெகிழ்ந்து உருகிய உருக்கமே யாம்.

நாவலர் பெருமான் தம்மை நாயனார் வரிசையில் – குரவர்கள் வரிசையில் – வைத்துப் பாடியதற்குத் தப்பாது கோபங் கொள்ளலாம். ஆனால், பிள்ளையின் நன்றிக்கடனை ஏற்காமலிருத்தல் இயலா மலேயிருக்கும்.

இக்காலம் 'கடவுளை நம்புகிறவர்கள் முழுமூடர்கள்' என்று கூறுகின்ற நாஸ்திக காலம். இப்படிப்பட்ட காலத்தில். நாவல ருக்குக் குரு பூசையா? என்ற குரல் எழுமானால் அதில் நூதனமேயில்லை. அக் குரலுக்கு எதிரொலி 'ஆம் நாவல ருக்குக் குருபூசை".

அது நாம் தொடங்கிய பூசையன்று. நாவலர் காலத்திலேயே தொடங்கிய பூசை. பீற்றர் பேர்சிவல் என்கிற வெள்ளைக் குருக்கள் நடத்திய பூசை. அந்தப் பூசையை நாம் தொடர்ந்து நடத்துகின்றோம் என்போமாக.

பதினான்கு வருடம் பீற்றர் பேர்சிவல் பாதிரியாரோடு ஒன்றியிருந்த நாவலர் 1848ஆம் ஆண்டில் அவரைப் பிரிந்தார். பாதிரியார் பிரிவாற்றாதவர் போன்று, ஒரு சில மாதங்களின் பின், தமது பாதிரி உத்தியோகத்தைப் பரித்தியாகஞ் செய்து

விட்டுச் சென்னைக்குச் சென்று ஒரு கல்லூரியில் பண்டிதராயமர்ந்து, தின வர்த்தமானி என்கின்ற தமிழ்ப் பத்திரி கையை நடத்திக் கொண்டுமிருந்தார். அவ்வாறு அவர் அங்கே இருக்கின்ற காலத்திலே சில வருடங்களின் பின் நாவலர் பெருமான் தமிழ் நாட்டில் திக்கு விஜயஞ் செய்து சைவப் பிரசங்க மழை பொழிவாராயினார்.

பாதிரியார் பிரசங்கம் நடக்கும் இடங்களுக்குப் போய், நாவலர் எதிரில் எழுந்து நின்று, "மம குரு" என்று வாயாராக் கூறிக் கைகூப்பி வணங்கி வருவதுண்டு. "மம குரு" சமஸ்கிருத வார்த்தை. "எனது குரு" என்பது அதன் கருத்து. கைகூப்பி வணங்கும் வணக்கமே பூசை; 'மமகுரு' மந்திரம்.

பேர்சிவல் பாதிரியார் முன்னமே நாவலருக்குக் குருபூசை நேரில் நடத்தி விட்டார்.

யாழ்ப்பாணச் சமயநிலை என்ற துண்டுப் புத்தகத்தில் சாக்கிய நாயனார் போற் காலங் கழிக்கின்ற பாதிரிமாரும் உண்டு என்று நாவலர் குறிப்பிடுவது, பேர்சிவல் பாதிரியார் ஆகலாம் என்று ஊகிக்க இடமுண்டு.

இற்றைக்கு 96 வருடங்களுக்கு முன் 1874ஆம் ஆண்டில் இதேயிடத்தில் நாவலர் அவர்கள் மகேசுர பூசை நடத்திக் கோயில் விழாவில் தேவாரப் பாரா யணஞ் செய்வித்தார்கள்.

இச் சம்பவத்தைக் கனகரத்தின உபாத்தியார் எழுதிய நாவலர் சரித்திரம் நன்கு வருணித்துக் காட்டுகிறது. அது வருமாறு :

வண்ணார்பண்ணையிலுள்ள த. இரா கவப்பிள்ளை, கு.செல்வநாயகம்பிள்ளை என்னும் இருவராலே கட்டுவிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதி மடத்திலே பவ வருடம் வைகாசி மாதம் 20ஆம் திகதி திங்கட்கிழமை மூலநட்சத்தி ரத்திலே, திருஞானசம்பந்தமூர்த்தி நாய னார் குருபூசையும், அக்கோயில் வசந்த மண்டபத்திலே பிரசங்கமுஞ் செய்யப் பட்டன.

கந்தசுவாமி கோயிற் திருவிழாச் சமீபித்தபடியால், தேவாரத் திருக்கூட்டச் சிறப்பையும், தேவாரம் முதலியவை திருவிழாக் காலத்திலே சுவாமிக்குப் பின்னாக ஓதுவதாற் சனங்களுக்கு உண்டாகும் கடவுள் பக்தியையும் இவ் யாழ்ப்பாணத்துச் சனங்களுக்குக் காட்ட நினைந்து, திருவாவடுதுறையினின்றும் ஓதுவார் சிலரை அழைப்பித்து, திரு விழாக் காலத்திலே அவர்களுக்கும் இங்குள்ள மற்றைச் சைவர்களுக்கும் தெற்கு வீதி மடத்திலே புண்ணிய வான்கள் சிலரைக் கொண்டு மகேசுர பூசை செய்வித்து, சுவாமி வீதியிலே உற்சவங் கொண்டருளும் போது, சுவாமிக்குப் பின்னாக அவர்களைக் கொண்டு தேவாரம் ஓதுவித்துக் கொண்டு வந்தார். இவர்கள் தமிழ் வேதமாகிய தேவாரத்தை ஓத அதனைக் கண்ட பிராமணர், தாங்களும் வந்து சுவாமிக்குப் பின்னாக வேதம் ஓதுவாராயினார்கள். அவரும் விபூதி உத்தூளனஞ் செய்து திரிபுண்டரந் தரித்துத் தலையிலே சிர மாலையும் கழுத்திலே கண்டிகையும், கையிலே பௌத்திரமுந் தரித்து யாவ

ருக்கும் பக்தியை விளைவிக்கத் தக்க சிவவேடப் பொலிவோடு திருக்கூட்டத் தலைவராய் நின்றார். அத் திருக்கூட்டத்தின் சிறப்பை என்னென்று சொல்வோம்! எதற்கொப்பிடுவோம்! ஆதியிலே சுப்பிர மணியப் பெருமானின் அவதாரமாய் விளங்கிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் 16000 திருக்கூட்டத்தோடு தோன்றிய சிறப்புக் கொப்பிடலாம்.

மூன்று வருடத்தின் பின் நூற்றாண்டு விழா வெகு சிறப்பாக இங்கு நிகழும். இந்த இடம் அழகிய கட்டடங்கள் அமைந்ததாய் குருகுல வகுப்புக்கள், பண்ணிசை வகுப்புக் கள், புராணபடன வகுப்புக்கள், சைவப் பிரசாரப் பயிற்சி வகுப்புக்கள் கொண்டதாய் மிளிருமென்பது பூரண நம்பிக்கை. அப்பொழுது நாவலர் பெருமானின் ஆத்ம சக்தி மகா சாந்தியெய்தி நாவலர் பணிச் சபைக்கு நல்லாசி வழங்கும்.

என்றும் இளையோனான திரு முருகன் திருவருள் கைகூடுவதாக.
*(நாவலர் குருபூசை நல்லை நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றபோது நிகழ்த்திய உரை)*

---

**சுழிபுரம் - தொல்புரம்**

## பிரசங்கபூஷணம், கலாபூஷணம்
## உயர்திரு. நடேசன் சிவசண்முகமூர்த்தி B.A (Hons) Dip.in Edu.

**( இளைப்பாறிய முதன்மை ஆசிரியர்)**



திருநீற்றுப் பொலிவுடன்
திருமுறைகள் பாடிய தொண்டன்
கணீர் என்ற குரலால் – சைவசமய
கருத்துரைத்த இயல்வாணன்
நாட்டார் பாடல் பெருமைதனை
நானிலம் பரப்பிய பாவலன்
இன்பத்திலும் துன்பத்திலும் எவர்
இல்லத்திலும் பாடிப் பரவிய பக்தன்
விண்ணக அழைப்பை ஏற்று
விரைந்த செய்தி கேட்டு விறைத்தோம்.
பெறுக சாந்தி!

# திருவாதிரை

பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள்

மார்கழி தேவர்களுக்கு அருணோதய காலம். தை முதல் ஆனி வரை உத்தரா யணம்; தேவர்களுக்கு அது பகற்போது. ஆடி முதல் மார்கழி வரை தட்ஷிணா யனம்; தேவர்களுக்கு இரவு. இந்த வகையில் மார்கழி பின்னிரவு. வைகறைப் போது என்று சொல்லலாம். சிவவழி பாட்டிற்கு உவப்பான காலம். அதனாலே தான் மார்கழி முழுமையாக வழிபாட்டிற் குரியதாகி உள்ளது. மார்கழி மட்டுந்தான் வழிபாட்டிற்குரிய காலமா! ஏனைய மாதங்கள் வழிபாட்டுச் சிறப்பில்லா தனவா! என்பதொரு ஐயம் இங்கே நிகழ வாய்ப்பிருக்கிறது.

எல்லா மாதங்களும் வழிபாட்டிற்குரி யவைதான், ஐயமில்லை. ஆனால் சில சில காலங்கள் சில சில வழிபாட்டு முயற்சி களுக்குச் சிறப்பானவை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். காலை, நண்பகல், முன்னிரவு என்று உணவு கொள் ளுகின்றோம். ஒரு நியதிக்கமை வாகவே அதனை நடைமுறைப்படுத்து கின்றோம். **'ஒரு நாளுணவை ஒழியென்றாலொழி யாய் இருநாளுக் கேலென்றா லேலாய்'** என்பது ஒளவையார் தருவ தொடு பாடற் பகுதி. இஃது ஒன்று. 'காலை விளங்கனி கடும்பகல் சுக்கு மாலை கடுக்காய் மண்டலம் உண்பரேல்' என்பது சுதேச வைத்திய வாகடத்துள்ளதொரு பாடற் பகுதி. இந்தப் பாடல் குறிப்பிடும் நியதி மாறினால் பயன் பூஜ்ஜியமாகி விடும். ஆகவே ஏதோ சில குறியீடுகள் நோக்கி ஒழுங்கு கவனிக்கப்படவேண்டும். ஒழுங்கு மாறினால் பயன் பூஜ்ஜியந்தான் என்பது தெளிவாகின்றது. அஃதே போன்று வழிபாட்டிற்கென்று குறிப்பிடப்படும் கால ஒழுங்குகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் மண்ணில் நல்ல வண்ணம் வாழமுடியும். இந்த வகை சிந்திக்கும்போது தேவர்களது பின்னிர வுக் காலம் எங்கள் வைகறையாகி அதிகாலை வழிபாட்டிற்குரிய மார்கழி நீராடல் திருவெம்பாவை நோன்பு என்ப வற்றுக்குரியதாதல் பொருத்தந்தானே!

ஆன்மாவைப் பீடித்துள்ள வினைமாசு நீங்கிச் சிந்தை தூயதாகிப் புனிதமான வர்களாக வாழவேண்டும் என்னும் எண்ணத்துடன் பண்டைய மக்கள் பல்வேறு வகை நோன்புகளை அநுட்டித்துள்ளனர். அவற்றுள் மார்கழி நோன்புஞ் சிறப்புடைய தொன்று. நாடு வளம்பெற வேண்டு மென்றும், தமக்கு நல்ல கணவன் கிடைக்கவேண்டும் என்னுஞ் சிந்தை களைக் கருத்திற்கொண்டும் கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் நோன் பிருந்தனர். அதிகாலை நித்திரை விட்டெ ழுந்து தம்மைத் தூய்மையாக்கிக் கொண்டு தம் தோழியரையும் துயிலுணர்த்தி ஆற்றுக்குச் சென்று நீராடித் தேவியின் வடிவை ஈர மணல் கொண்டு ஆக்கிச் சிறப்பாகத் திருவாதிரைத் திருநாளை இறுதி நாளாகக் கொண்ட பத்துத் தினங்களும் திருவெம்பாவை என்பது கண்டுவழிபட்டனர். அம்மானை, சாழல், பூவல்லி, உந்தி பறத்தல், தோணோக்கம், பொன்னூசல் என்று கன்னியர்களாடிய ஆடல்களையெல்லாம் தெய்வீகமொளிர் அருட்பாக்களாக்கி ஆனந்திக்க வைத்த மணிவாசகசுவாமிகள் இந்த மார்கழி நிராடலையும் திருவெம்பாவை என்னும்

பெயரில் அருட்பாடல்களாக்கி இன்பங் காண வைத்துள்ளார்கள். மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரையை இறுதித் தினமாக்க கொண்ட பத்து நாள்களும் திருவெம்பாவை நோன்புக் காலமாயிற்று.

*மாதர்கண் மாத ரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்*

*ஆதிரை முன்னீ ரைந்தே யாகிய தினங் ளெல்லாம்*

*மேதகு மனைக டோறும் அமைந்திருள் விடிவதான*

*போதிவர் தம்மிற் கூடிப் புனற்றடம் ஆடல் செய்வார்.*

*என்னுந் திருவாதவூ ரடிகள் புராணச் செய்யுள் இக்கருத்திற்கு ஆதாரமாகின்றது.*

நடராசப் பெருமானுக்கு வருடத்தில் ஆறுமுறை சிறப்பான அபிஷேக காலமாய் அமைகிறது. அவற்றுளும் முதன்மையானது மார்கழித் திருவாதிரையில் நடைபெறுவது என்பர். ஆதிரையான் என்றொரு சிறப்புப் பெயரையுஞ் சிவன் தாங்கியிருப்பது சிந்திக்கப்படவேண்டியது. திருவாதிரை யன்று அதிகாலை – சூர்யோதயத்தின் முன்பாக – வைகறைப் போதிலே நடேசரபி ஷேகம் நடைபெற்று நிறைவெய்தும். அருணோதயத்தில் அடியவர்களுக்கு அனுக்கிரகித்தற் பொருட்டு எழுந்தருளி வரும் ஆதிரையான் தரிசனங் கிடைக்கும். இது ஆர்த்திரா தரிசனம் எனப் பெயர் பெறும். ஆர்த்திரா என்னும் வடமொழிச் சொல் நனைதல் என்னும் பொருள் தருவது என்று காஞ்சிப் பெரியவர் சந்திரசேக ரேந்திர சுவாமிகள், ஆச்சாரிய சுவாமிகள் உபந்நியாசம் என்னும் நூலிற் குறிப்பிட்டுள் ளார்கள். எனவே ஆர்த்திரா தரிசனம் என்பது, சுவாமியை நனைந்த நிலையிலே தரிசித்தல் என்று பொருள்படும். இந்தத் திருவெம்பாவைக் காலம் பத்து நாளும் சிதம்பரத்தில் மகோற்சவ காலமாகும். திருவாதிரைக்கு முதன் நாள் தேர்த்திரு விழாவும் இரவு நடேசரபிஷேகமும் நடைபெறும். சூரியோதயத்தின் முன் அபிஷேக ஆராதனைகள் எல்லாம் நிறை வாகி அருணோதயத்தில் ஆர்த்திரா தரிசனங் கிடைக்கும். இந்தத் தரிசனங் கிடைத்துவிட வேண்டுமே என்னும் ஏக்கத் துடன் அங்கு பல்லாயிரணக்கணக்கான மக்கள் கூடுவது வழக்கம். இந்த வகையில் தில்லையில் நடைபெறும் வழிபாட்டு முறைகளே அனைத்துச் சிவாலயங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இவ்வகை சிதம்பரத்திலே ஒரு திரு வாதிரை மகோற்சவத்தின் போது தேர்த்திருவிழாவன்று தேரின் சில்லு நிலத்திலே புதைந்து தேர் ஓடாது நின்று விட்டதென்றும் சேந்தனார் மனங் கசிந்து ருகித் திருப்பல்லாண்டு பாடினாரென்றும் ஒரு வரலாறு உண்டு. பதின்மூன்று பாடல்கள் பாடி வாழ்த்தியபோது தேர் ஓடியதென்றுஞ் செய்தி உண்டு. சேந்தனார் பாடிய பதின்மூன்று திருப்பாடல்களும் ஒன்பதாந் திருமுறையில் இடம்பெற் றுள்ளன.

**ஆரார் வந்தார் அமரர்குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்**

**நாரா யணனொடு நான்முகன் அங்கி ரவியும் இந்திரனும்**

**தோரார் வீதியிற் றேவர் குழாங்கள் திசையனைத் தும் நிறைந்து**

**பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே**

என்பது ஆதிரை பற்றிய குறிப்பைக் கொண்டுள்ளதும் சேந்தனார் பாடல் வரிசையிற் பன்னிரண்டாம் இடத்தைப் பெற்றதுமான திருப்பல்லாண்டாகும்.

**ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்**
**கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்**
**கார்தரு சோலைக் கபாலீச் சரம மர்ந்தான்**
**ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்**

என்பது எலும்பைப் பெண்ணாக்கி அற்புதஞ் செய்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தேவாரம். 'ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள் துய்ப்பனவுங் காணாது போதியோ பூம்பாவாய்' என்றும், 'ஆதிரைநாள் காணாது போதியோ பூம்பாவாய்' என்றும், தைப்பூசங் காணாது போதியோ பூம்பாவாய்' என்றும், 'பங்குனி உத்தரங் காணாது போதியோ பூம்பாவாய்' என்றும் நட்சத்திரங்கள் உடனாகி வரும் விழாக்களை எடுத்துக்கொண்ட சுவாமிகள் திருவாதிரை திருவோணம் இரண்டையுஞ் சிறப்பாகக் காட்டுகின்றார்கள். இருபத்தேழு நட்சத்திரங்களுக்குள்ளே திருவென்று போற்றப்படுஞ் சிறப்பு அடையப் பெற்றவை அவை இரண்டுமே என்பதும் இந்த இடத்துக் கவனிப்பிற்குள்ளாக வேண்டும்.

**முத்து விதானம் மணிபொற் கவரி முறையாலே**
**பத்தர் களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே**
**வித்தகக் கோல வெண்டலைமாலை விரதிகள்**
**அத்தன் ஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம்.**

என்னும் அப்பரடிகள் தேவாரமும் திருவாதிரை பற்றிப் பேசுகின்றது.

திருவாதிரை விரதம் திருவெம்பாவை உடனாகிப் பத்தாவது நாளாக அமைந்துள்ள தால் திருவாதிரை தவிர்ந்த ஒன்பது தினங்களும் நாளாந்தக் கடன்களை நிறைவு செய்து கொண்டு சிவாலய தரிசனஞ் செய்து திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி என்னுந் திருவருட் பாடல்களைப் பாரா யணஞ் செய்யலாம். திருவாதவூரடிகள் புராணங் கேட்டல், வாசித்தல், பயன் சொல்லுதல் என்பனவும் இடம்பெறலாம். நண்பகல் ஒருவேளை உணவு கொள்ளலாம். இரவு உணவு கொள்ளாதிருக்க முடியாத வர்கள் பால் பழம் அல்லது பலகாரம் உண்ண லாம். திருவாதிரையன்று வைகறைக்கு முன்னதாகத் துயிலுணர்ந்து நாளாந்தக் கடமைகளை நிறைவு செய்து தோய்த்து லர்ந்த ஆடை அணிந்து சிவசின்னங்கள் தரித்துச் சிவாலயஞ் சென்று நடேசரபிஷேகம் காணவேண்டும். தொடர்ந்து ஆர்த்திரா தரிசனமும் கிடைக்கும். அன்று உபவாசமா யிருத்தல் நல்லது. முடியாதவர்கள் மதிய உணவு கொள்ளலாம். மறுநாள் காலைக் கடன்களை நிறைவு செய்து சிவாலய தரிசனஞ் செய்து சிவபூசையுங் கண்டு வீடு வந்து, சுற்றத்தவருடன் பாரணை உணவு கொள்ளலாம். அன்றைய பகற் போதில் துயில்வதோ மீண்டும் உணவு கொள்வதோ தவிர்க்கப்படவேண்டியவை.

திருவாதிரையன்று நிவேதனமாகச் சுவாமிக்கு களி வைக்கும் முறையொன் றுண்டு. அதனைச் செய்தவர் சேந்தன் சிவனடியார்களை உபசரித்து உணவு உண்ணச் செய்து தில்லையம்பதியிற் பெருவாழ்வு வாழ்ந்தவர். ஒரு முறை சில தினங்கள் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தது. விறகு வெட்டக்கூடிய வாய்ப்பும் இல்லை. வீட்டில் உணவுப் பொருள்களும் குறையத் தொடங்கின. அன்றொரு திருவாதிரை நாள். மழை பெய்து கொண்டிருந்தவேளை, சிவனடி யார் ஒருவர் வந்துவிட்டார். அவரை அகமும் முகமும் மலர வரவேற்றனர் தம்பதியர். உணவு அளிப்பது பற்றிய சலனம் மனத்தைக் குடைந்து கொண்டிருக்க அடியவரைத் தக்கதோராசனத்து இருந்த ருளச் செய்து உபசரித்தனர். சேந்தனின் வாழ்க்கைத் துணைவி, வேண்டியதை வேண்டியவாறு தக்க தருணத்தில் தலை வனுக்கு உதவுந் தர்மபத்தினி, தம்மிட

மிருந்த அரிசிமாவை இருந்த சிறிதளவு உழுந்துடன் பொருந்தும் வகை கலந்து வெல்லப்பாகும் சேர்த்து அருமந்த களி யாக்கிச் சிவனடியாரை அமுது செய்வித்துக் களி பேருவகை கொண்டனர். அடியவர் மிகுந்த மனநிறைவுடன் விடைபெற்றார். மறுதினம் அதிகாலை இறைவழிபாட்டிற் காகச் சிவாலயம் சென்றனர் தம்பதியர். ஆலயத் திருக்கதவைத் திறந்து உள்ளே சென்ற அர்ச்சகர்கள் இறை சந்நிதியிற் களிசிதறி இருப்பது கண்டு அதிர்ச்சி யடைந்து, நின்றவர்களைப் பார்வையிட வைத்தனர். சேந்தனாரும் அவர் துணைவி யாரும் அந்தக் காட்சிகளைக் கண்டதும் உள்ளம் நெக்கு நெக்குருக ஆனந்தக் கண்ணீருகுத்து முந்திய தினம் நடந்த வற்றையெல்லாம் சொல்லினர். இறைவன் திருவிளையாடலை வியந்து அங்கு நின்றோர் சேந்தனைப் போற்றினர். இந்த நிகழ்வுதான் திருவாதிரைக் களி நிவேதன மரபை உருவாக்கியதென்பர்.

சிவபெருமானை உஷக்காலம், பிராதக் காலம், மத்தியான்னர், சாயன்னம், அர்த்த யாமம் என்னுங் காலங்களிற் சிறப்பாக வழிபடுவோம். அவற்றுள் உஷக்காலப் பூசை மார்கழி மாதத்திற் சிறப்புப் பெறுவது. அந்த மாதத்தில் நிகழ்வதாகிய திருவெம் பாவை வழிபாடு திருவாதிரை வழிபாடு உஷக் காலத்திலேயே நடைபெறும். வழி பாட்டின் போது மல்லிகை, முல்லை, மாந்தரை வெள்ளெருக்கு, வெண்டாமரை, வெள்ளலரி, பிச்சி, நந்தியாவர்த்தம் முதலிய வெள்ளை நிற மலர்களைப் பயன்படுத்துவது நல்லது. உஷக்காலப் பூசைக்கு வெள்ளைநிற மலர்களே உவப் பானவை என்று அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் கூறுவர். 'வெள்ளெருக்கஞ் சடை முடியான்' என்று கம்பராமாயணம் தரும் செய்தியும், கண்ணி கார்நறுங் கொன்றை காமர் வண்ணமார்பின் தாருங்கொன்றை ஊர்தி வால்வெள்ளேறே; என்று புறநானூறு தரும் செய்தியும் இங்கு சிந்திக்கப்படக் கூடியவை.

திருவாதிரை நட்சத்திரம் சிவப்பு நிறமானது. அதனால் செம்மீன் என்னும் பெயரையுமுடையது. நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த அண்டத்துக்குரிய சூரியனும் மிகமிகப் பெரியது திருவாதிரை.

திருவாதிரை நோன்பை முறைப்படி அநுட்டித்தவர்களாகிய பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர் என்போர் பெரும் பேறு பெற்றுள்ளனர். பதஞ்சலியர் இந்த விரத அநுட்டானங் காரணமாக நடராசரின் திருநடனத்தை என்றுங் கண்டுகளிக்கக் கூடிய வகையில் பெருமானின் திருவடி களின் கீழிருக்கும் பெரும்பேறு பெற்றுக் கொண்டார். எம்பெருமானை அன்றி வேறு யாரையும் வணங்காத இயல்பு பொருந்திய உபமன்யு முனிவரை மகனாகப் பெறும் பாக்கியம் பெற்றவர் திருவாதிரை விரதம் அநுட்டித்த வியாக்கிரபாதர்.

எந்தவொரு விரதத்தையும் அநுட்டிக்கத் தொடங்குமுன், இந்த விரதத்தை இந்தத் தேவைக்காக இந்த முறைப்படி இவ்வளவு காலம் தொடருவேனென்று திட்டமிட்டுக் கொண்டு நியமந் தவறாது நடந்து கொள்ள ஒவ்வொருவரும் தம்மை நெறிப்படுத்திக் கொண்டு பயன்பெறுவாராக.

*1999.12.13இல் இலங்கை வானொலியில் பதிவாகியது.*

# நீத்தார் நினைவு



2012 ஒக்ரோபரில் இறைபதம் அடைந்த திரு. சிறீரங்கம் அப்புத்துரை அவர்கள் (10.10.2012), அமரர் திரு. விஜயரட்ணம் சிவசுப்பிரமணியம் அவர்கள் (10.10.2012) பற்றிய நினைவுக் குறிப்புகளைச் சுருக்கமாகப் பதிவு செய்கிறோம். இவர்கள்

**"அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்**
**நன்குடையான கட்டே தெளிவு" – குறள் 513**

என்ற அய்யன் திருவள்ளுவரின் திருக்குறளுக்கு உதாரண சைவத் தமிழ்ச் சான்றோராய் வாழ்ந்தவர்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எமக்கும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டியவர்கள்.

## கலாபூஷணம், பண்டிதர், சைவப்புலவர் சிறீரங்கம் அப்புத்துரை அவர்கள்

யாழ்ப்பாணம் மயிலங்கூடலைச் சேர்ந்த கலாபூஷணம், பண்டிதர், சைவப்புலவர் சிவத்திரு சிறீரங்கம் அப்புத்துரை அவர்கள் சிறந்த தமிழ்ப் புலமையாளர், நல்லாசிரியராகவும், ஆளுமைமிக்க அதிபராகவும் பணிபுரிந்து அரசு விருது பெற்றவர். பண்டிதர் அவர்கள் கல்விப் பணியுடன் சைவப்பணியும், சமூகப் பணியும் செய்து மக்கள் போற்ற வாழ்ந்தவர். 23.04.1928 இல் பிறந்த பண்டிதர் அப்புத்துரை அவர்கள் தமது எண்பத்து நான்கு அகவையில் 10.10.2012 இல் இறைபதம் அடைந்தார். சைவத் தமிழ்ப் பெரியாரின் மறைவு குடும்பத்தவர்களுக்கு மட்டுமன்றி, சைவத் தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

பண்டிதர் அவர்கள் ஓய்வு பெற்றபின் மயிலங்கூடலில் சார்ந்த பகுதிகள் போர்க்கால சூழல் காரணமாக பாதுகாப்புப் பகுதிகளாக இராணுவம் பிரகடனப் படுத்தப்பட்டமையால், கொழும்பில் குடும்பத்தவருடன் சென்று வாழ்ந்து வந்தார். இடம்பெயர்ந்து கொழும்பில் வாழ்ந்த காலத்தில் ஐம்பதிற்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். நீத்தார் நினைவாக நல்ல பயனுள்ள நூல் வெளியீடுகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆலோசனை கூறியும் உதவி செய்தும் எல்லோரும் பயன்பெறச் செய்து வந்தார். சைவநெறி நின்று சைவ சித்தாந்தம் கற்று சைவப்புலவர் பட்டமும் பெற்று வாக்கிலும் வாழ்விலும் சைவத் தமிழ்ப் பண்பாடு காத்து வாழ்ந்தவர்.

கனடாவிற்கு தன் துணைவியாருடன் 2008இல் வந்து ஐந்து மாதங்களுக்கு மேலாக மகள் குடும்பத்தவருடன் தங்கியிருந்து கொழும்பு திரும்பினார். அக்காலப் பகுதியில் சைவசித்தாந்த மன்றம் நடத்திய திருவருட் செல்வர் விழாவில் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களும் அவரின் துணைவியார் சைவப் புலவர் திருமதி இரத்தினம் அப்புத்துரை அவர்களும் கலந்து கொண்டு அரிய சொற்பொழிவாற்றி சைவ சமய குரவர் பாடசாலை மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகளும் கூறினார்கள்.

கனடாவில் 2008இல் தங்கியிருந்த வேளையில் தாம் எழுதி வெளியிட்ட இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப் புலவர் வரலாறு முதலாம் பாகம், இரண்டாம் பாகம் என்ற இரு நூல்களை

கனடா எழுத்தாளர் இணையத்தின் ஆதரவோடு வெளியிட்டார்.

பண்டிதர் அவர்கள் அமரர் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி, மு.கந்தையா அவர்களின் நினைவு வெளியீடாக சித்தாந்த ஞானக் களஞ்சியம் என்ற நூலை தொகுத்து வெளியிடுகின்ற பொழுது, அன்புநெறியில் வெளிவந்த அமரர் இலக்கிய கலாநிதி மு. கந்தையா அவர்கள் பற்றிய கட்டுரையை அவருக்கு அனுப்பியிருந்தேன். அதன் பின்னர் பண்டிதர் அப்புத்துரை அவர்கள் சைவ சித்தாந்த மன்றத்துடன் தொடர்புகள் கொண்டார்கள். அன்புநெறி இதழுக்கு பல அரிய கட்டுரைகள் எழுதி அனுப்பினார்கள். அவை அன்புநெறியில் வெளிவந்தன. தாம் எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்ட நூல்கள் சிலவற்றை மன்ற நூலகத்திற்கு அன்பளிப்பாக அனுப்பி உதவினார்கள்.

பண்டிதர் அப்புத்துரை அவர்கள் தொகுத்து வெளியிட்ட சம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள் - பதிக விளக்கத்துடன் கூடிய அருமையான நூலை ஈழத்து சிதம் பரத்தில் நடராசர் பிரதிட்டை செய்த நூறாவது ஆண்டு நாள் நினைவு வெளி யீடாக வெளியிட காரைநகர் மணிவாசகர் மடாலய அன்னதான சபையினருக்கு உவந்து அனுமதி அளித்தி ருந்தார்.

## அமரர் பேராசான் அதிபர் திரு. விஜயரட்ணம் சிவசுப்பிரமணியம் அவர்கள்



அமரர் திரு. விஜயரட்ணம் சிவசுப்பிர மணியம் அவர்கள் நல்லாசிரியராக, ஆற்றலும் ஆளுமையும் மிக்க அதிபராக, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று மிக்கவராக விளங்கியவர். அவர் விடு முறையில் தன் துணைவியாரோடு சீசெல் சுக்குப் போய் தனது நண்பர்களையும் தாம் மற்றவர்களோடு சேர்ந்து உருவாக்கிய ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலயத்தையும் மற்றும் இடங்களையும் பார்த்துவரப் போயிருந்தனர். அங்கிருக்கையில் அவர் உடல் நலம் குன்றி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பெற்றிருந்தார். திரு. சிவ சுப்பிரமணியம் அவர்கள் தமது எண்பத்தி ரண்டாவது அகவையில் 10.10.2012இல் சீசெல்சு வைத்தியசாலையில் இறைபதம் எய்தினார்.

திரு.வி.சிவசுப்பிரமணியம் (சிவா) அவர்கள் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை, ஐயனார் கோவிலடியிலே பிறந்து வளர்ந்து, பாடசாலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்று, தொடர்ந்து தனது பட்டப் படிப்பினை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முடித்துச் சிறந்த கல்விமானாக தான் கற்ற கல்லூரியாகிய யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியரானார். அக்கல்லூரியின் மாணவ சாரணிய இயக்கத்திற்கும் பொறுப்பாசிரிய ராக இருந்து அரும்பணி செய்தார். அவர் முருங்கன் மகா வித்தியாலயத்திலும், அநுராதபுரம் விவேகானந்தா மகா வித்தி யாலயத்திலும், அளவெட்டி அருணோ தயக் கல்லூரியிலும் அதிபராகக் கடமை யாற்றியுள்ளார். 1980இல் நைஜீரிய வவுச்சி மாநிலத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். திரு. சிவா அவர்கள் நல்ல ஆசிரியராக, சாரணியத்தைப் பயிற்றுவித்தவராக, ஆசிரிய சங்கத் தொழிற்சங்கவாதியாக, புகழ்பூத்த அதிப ராக, சமூக சேவையாளனாக, சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார், திரு ஹன்டி பேரின்பநாயகம் போன்றோரின் நூற்

றாண்டு விழாக் குழுவின் இணைச் செயலாளராக, நூலாசிரியராக, பத்திரிகை எழுத்தாளராக, மனித நேயம் உள்ளவராக, சைவத்தமிழ் பாரம்பரியங்களை பேணுபவராக, சைவத்தமிழ்ப் பற்று மிக்கவராக விளங்கியவர்.

சீசெல்சு நாட்டில் அவரது ஆசிரியப் பணிகளும் எழுத்துப் பணிகளும் மிக உன்னதமாக வளர்ச்சி பெற்றன. அவரது துணைவியாரும் விநாயகர் மீது பாமாலை பாடியுள்ளார். ஆன்மீகம் நிறைந்தவர். திருமதி சரோஜினி சிவசுப்பிரமணியம் அவர்கள் 2010இல் "தத்துவஞானக் கழலோன்" என்ற விநாயகர் பாடல்களின் தொகுப்பைத் தயாரித்து, அதற்கு முன்னுரை எழுதுமாறு கேட்டிருந்தார்கள். நான் முன்னுரையை எழுதி அனுப்பியிருந்தேன். அதனைப் படித்து மகிழ்ந்த சிவாவும் துணைவியாரும் பாராட்டி எழுதியும் தொலைபேசியில் பேசவும் செய்தார்கள்.

திரு. சிவா அவர்களையும் குடும்பத்தவரையும் நைஜீரியா வவுச்சி மாநிலத்தில் 1981இல் முதன் முதலாகச் சந்தித்தோம். அன்று அவரின் இல்லத்தில் இரு குடும்பத்தவரும் சிலமணி நேரம் கலந்துரையாடினோம். அன்றிலிருந்து தொடர்புகள் தொடர்ந்தன. நாங்கள் கனடா வந்த பின்னர் யாழ் இந்துக் கல்லூரி அதிபராயும், ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்த திரு. நமசிவாயம் சபாரத்தினம் அவர்களின் நினைவு வெளியீடு செய்யும் பொழுது, திரு. சிவா அவர்களுடன் தொடர்போடு இருந்தோம். அவர் பல செய்திகளையும் ஆலோசனைகளையும் தந்தார்.

காலப்போக்கில் அவர்கள் நடத்துகின்ற விழாக்கள் பற்றியும், வெளியிடும் மலர்களையும் அனுப்பியும் வந்தார். மன்றம் வெளியிடும் அன்புநெறி இதழ்களை மிகவும் பாராட்டி ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் எழுதுவார். தாம் வெளியிடும் மலர்களிலும் அன்புநெறியில் வெளிவந்த கட்டுரைகளை நன்றி தெரிவித்து வெளியிடுவார். அன்புநெறியை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பார். திரு. சிவசுப்பிரமணியம் குடும்பத்தவர் ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலயம் கட்டி கும்பாபிஷேகம் செய்ய அங்குள்ள மக்களை தம்மோடு ஒத்துழைக்கச் செய்து அரிய சிவப் பணியைச் சிறப்பாக சீசெல்சு நாட்டில் செய்துள்ளார்கள்.

திரு. திருமதி சிவசுப்பிரமணியம் அவர்களையும் அவர்களின் மகன் சிற்சபேசன் அவர்களையும் 2010இல் சிதம்பரத்தில் நடைபெற்ற சைவ மாநாட்டில் சந்தித்து அளவளாவியது மனதிற்கு நிறைவையும் ஆறுதலையும் தருகிறது. அவர் 2010 ஒக்ரோபரில் தமது எண்பது வயது நிறைவில் வெளியிட்ட நூலொன்றை **SOUVENIR 80 - My Educational Memories by V. Siva supramaniam** அனுப்பியிருந்தார்.

திரு. சிவசுப்பிரமணியம் அவர்களின் ஆன்மா முத்தி பெறவும், உற்றார் உறவினர் ஆறுதல் அடையவும் சிவபெருமான் திருவருளை வேண்டி வழிபடுவோமாக.

# கந்தபுராணம் ஊற்றெடுக்கும் தேன் துளிகள்

**சிவ. சண்முகவடிவேல் அவர்கள்**

கந்தபுராணம் கந்தப்பெருமான் மீது பாடப்பெற்றது. அதைப் பாடியவர் கச்சியப்ப சிவாசாரியர். காஞ்சி மாவடி வைகும் செவ்வேள் கச்சியப்ப சிவாசாரியருடைய கனவில் வெளிப்பட்டுக் கந்தபுராணத்தைக் கட்டுரைக்கும்படி திருவாய் மலர்ந்த ருளினார்.

கந்தன் கட்டுரைக்கு உள்ளங் கனிந்த கச்சியப்ப சிவாசாரியர் ஈரையாயிரத்து முன்னூற்று நாற்பத்தைந்து விருத்தப் பாக்களால் கந்தபுராணத்தைப் பாடி முடித்தனர்.

கந்தபுராணத்து பத்தாயிரத்து முன் னூற்று நாற்பத்தைந்து பாடல்களும் தேன்துளி முத்துக்கள். அத்தனையையும் இத்தரையில் விரிப்பதற்குக் காலம், இடம் இடந்தராததால் எல்லோருக்கும் எல்லா வேளைகளிலும் இன்பப் பயன் அளிக்க வல்ல ஒரு சில பாடல்களைக் கந்த புராணம் ஊற்றெடுக்கும் தேன் துளிகள் என்னும் தலைப்பில் தருவதற்குத் திரு வருள் பாலித்துள்ளதை முன்னுரைத்துப் பின் திருவருளைத் தொழுது வாழ்த்தி வணங்கி எழுதுகோல் முனையைச் சரிபார்க்கின்றோம்.

கந்தபுராணம் பாயிரம் காப்புச் செய்யுளுடன் ஆரம்பமாகின்றது. பாயி ரத்தில் மூன்றாவது பாடல் முருகப் பெருமானைத் துதிக்கின்றது. அதன் பொருள் பின்வருமாறு பேசப்படு கின்றது.

"பூவுலகத்தில் காஞ்சியம்பதி என்று ஒரு தெய்வீகத் தலமொன்று உளது. அத்திருத்தலத்தில் மாமரம் ஒன்று இருக்கின்றது. அந்த மாமரத்தின் அடியில் எங்குமான செவ்வேள் பெருமான் அங்கும் எழுந்தருளி உள்ளார். அப்பெருமானுடைய ஆறுதிருமுகங்களை வணங்குகின்றேன். கருணை வெள்ளம் பொழியும் ஆறுதிரு முகங்களை வணங்குகின்றேன். எல்லோ ரும் வணங்க நிற்கும் பன்னிரண்டு திருப் புயங்களைப் போற்றுகின்றேன். முருகப் பெருமானுடைய செந்தாமரை மலர் போன்ற திருவடிகள் எம்மைக் காப்பதாக. முருக மூர்த்தியினுடைய கொடியாகிய சேவலைத் துதிக்கின்றேன். வாகனமாகிய மயிலை வாழ்த்துகின்றேன். என்றும் குன்றாத இளமையோடு குன்று தோறும் ஆடல் புரியும் குமரவேள் திருக்கரத்தில் குடி கொண்டிருக்கும் வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட தீரவேலுக்கு வணக்கம் வணக்கம்.

**மூவிரு முகங்கள் போற்றி**
**முகம்பொழி கருணை போற்றி**
**ஏவரும் துதிக்க நின்ற**
**ஈராறுதோள் போற்றி காஞ்சி**
**மாவடி வைகுஞ் செவ்வேள்**
**மலரடி போற்றி அன்னான்**
**சேவலு மயிலும் போற்றி**
**திருக்கைவேல் போற்றி போற்றி.**

பாயிரத்தில் நாலாம் பாடல் 'இந்திர ராகி' என்னும் தொடக்கத்தைக் கொண்டது. இப்பாடல் கந்தபுராணத்தைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்களும் உள்ளம் உருகிக் கேட்பவர்களும் அடையும் பயனைக் கருப்பொருளாகக் கொண்டது. அதன் தாற்பரியம் பின்வருமாறு அமையும்.

முடிவில்லாத அசுரர்களுடைய ஆண வம் கெடும்படி கோபித்து அடக்கிய செவ்வேல் தரித்த கந்தவேள் பெருமானு

டைய இந்தக் கந்தபுராணத்தை ஓதுங்கள். ஓதுவீர்களோயானால் இந்திர செல்வத்தைப் பெறுவீர்கள். இந்தப் பூவுலகத்தில் இன் பத்தை அனுபவிப்பீர்கள். இனிமையோடு வாழ்வீர்கள். மனத்தில் நினைத்த இட்ட சித்திகள் எய்தப் பெறுவீர்கள். தேகாந்தத் தில் சிவபதம் அடைவீர்கள்.

இக்கருத்தை உறுதிப்படுத்துவது போலக் கந்தபுாணம் பத்தாயித்து முன் னூற்று நாற்பத்தி நாலாம் பாடல் வலி யுறுத்துகின்றது.

வற்றுதல் இல்லாத அருட்பிரவா கத்தைக் கொண்ட முருகக் கடவுளுடைய அருள்வளம் செறிந்த காதையைக் சொன்னாரும் கற்றாரும் உட்பொருளை ஆராய்ந்திடுவாரும், கசடறக் கற்ப முயல் வாரும் கேட்கலுற்றாரும் இவற்றிற்குப் பின்னணியாக நின்று நடாத்துபவர்களும் வீட்டின்பத்தை எய்தப் பெற்றோராவர்.

**வற்றா வருள்சேர் குமரேசன்வண் காதை தன்னைச்**
**சொற்றாரு மாராய்ந் திடுவாரும் துகறா ருமே**
**கற்றாருங் கற்பான் முயல்வாருங் கசிந்து கேட்க**
**லுற்றாரும் வீடு நெறிப்பாரி னுறுவ ரன்றே.**

**10344**

இனிப் படிப்பிற்குப் பயன் தரும் பாடலை ஒரு தரம் படித்துப் பாருங்கள்.

**இந்திர ராகிப் பார்மே**
**லின்பமுற் றினிது மேவிச்**
**சிந்தையி னினைந்த முற்றிச்**
**சிவகதி யதனிற் சேர்வர்**
**அந்தமி லவுணர் தங்க**
**ளடல்கெட முனிந்த செவ்வேற்**
**கந்தவேள் புராணந் தன்னைக்**
**காதலித் தோது வோரே.**

இச் செய்யுளை நூற்பயன் என்பர். நூலை ஐயந் திரிபறக் கற்பதனால் கிடைக்கும் பேறு நூற்பயனாகும்.

புராணங்கள் அனைத்தும் நூற்பயன் நுவலாதொழிந்ததில்லை. பெரிய புராணம் சூரியன் புறத்திருளைப் போக்குவது போலப் பெரிய புராணம் கற்பதனால் அகத்திருள் அகலும் என்னும்.

திருவிளையாடற் புராணம் சங்கநிதி, பதுமநிதிச் செல்வம் பெறுவர். தகைமை யான மக்களைப் பெறுவர். பகையை வெல்வர். மங்கலமான நல்ல திருமணம் பெறுவர். நோய் அணுகார். வாழ்நாள் நிரம்பப் பெறு வர். சுவர்க்க உலக வாழ்வில் திளைப்பர். சிவகதி அடையப் பெறுவர் என்னும்.

பன்னிரு திருமுறைகளும் பாடும் பணியைப் பணியாய்க் கொள்பவர் பெறும் பேறுகளைச் சொல்லத் தவறியதில்லை. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தாம் பாடியருளிய திருப்பதிகங்களில் ஓரிரு தவிர ஏனையவற்றிற்கெல்லாம் திருக்கடைக்காப்பு என்ற பெயரில் பயன் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசு நாயனார் ஓரிரு திருப் பதிகங்களுக்கு மட்டுமே பாடும்பயன் பாடியுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் பெரும் பாலான திருப்பதிகங்களுக்குப் பாடும் பயன் பதித்துள்ளார்.

மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராண நிறைவில் பாடும் பயன் தந்துள்ளார்.

ஒன்பதாம் திருமுறையில் பெரும் பாலான பதிகங்களுக்குப் பாடும் பயன் பாராட்டப்பட்டுள்ளது.

பத்தாம் திருமுறை காலையில் எழுந்து கருத்துற ஓதினால் இறை பேற்றைப் பெறலாம் என்னும்.

பதினோராம் திருமுறை ஆங்காங்கு பாடும் பயன் பறையும்.

பன்னிரண்டாம் திருமுறைப் பயன் முன்னர் பேசப்பட்டது.

# தீப தரிசனம்

## (திருக்கார்த்திகைச் சிறப்பு)

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

வேதசிவாகமங்களிலும் புராண இதிகாசங்களிலும் மிகுந்து புகழ்படக் கூறப்பட்டிருக்கும் முருகப் பெருமானது மகிமைகளைப் பலரும் அறிவர். மெய்யன்போடு வழிபடும் பக்தர்களுக்கு அவர்கள் ஆற்றும் அருட்செயல்களால் அவர்தம் இஷ்ட சித்திகளைப் பெறுவதற்கு எத்துணை வர்யப்பைத் தரவல்லதென்ற முறைகளைப் புராணங்கள் பல அறியத்தந்து வழிகாட்டுகின்றன.

தீமைமிக்க இக்கலியுகத்தில் கலியுக வரதனான முருகப் பெருமானை வழிபட்டு தாம் தாம் விரும்பிய பேறுகளை அடைவதோடு இவ்வையகமும் நன்றாக வாழவேண்டுமெனப் பிரார்த்திக்க வேண்டிய பெருங்கடமையும் எல்லோருக்குமுண்டு. சுக்கிரவார விரம், கந்தஷஷ்டி விரதம், கார்த்திகை விரதம் இவ்விரதம் மூன்றும் முருகப் பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படுபவை. கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நக்ஷசத்திரத்திலே முருகப் பெருமானுக்குப் பலதரப்பட்ட தீபங்களால் ஆரானை செய்து அஷ்டோத்தரம், திரிசதி, சகஸ்ரநாமார்ச்சனை, ஷண்முகார்ச்சனை, திருவிளக்கிடுதல் என்றெல்லாம் ஆராதனைகள் நடாத்தி தத்தம் இஷ்ட சித்திகளை இலகுவாகப் பெறவும் இயலும். கார்த்திகைப் பெண்களால் பாலூட்டி வளர்க்கப்படுவதனால் **'கார்த்திகேயன்'** என்ற திருநாமத்தைப் பெற்ற முருகப் பெருமான் இவ் ஈழவள நாட்டிலே அளப்பரிய திருவருள் புரிந்திருப்பதைப் பல புராணங்கள் வாயிலாகவும் அறிய முடிகிறது. ஈழத்திலே முருகன் கோவில்கள் பல இருப்பதும், அனேகர் முருக பக்தர்களாக இருப்பதும் கண்கூடு. தற்காலத்தில் மட்டக்களப்பு பகுதியில் ஏறாவூர் எனக் கூறப்படும் ஏறுமாவூரிலே, ஒருகால் ஓவியர் குடியிலே அரசர்கட்கெல்லாம் தலைவனான கொடைவள்ளல் 'நல்லியக் கோடன்' தனது கொடையினாலும் முருகப் பெருமானது புகழ்களைப் பரப்பியதாலும் செல்வாக்குப் பெற்று வாழ்ந்த போது, மூவேந்தரது பகைமைக்கு ஆளாகினான். இதனால் இயல்பான போர்மூண்டு முருகப்பெருமானின் திருவருட் சக்தியால் போரில் மூவேந்தரது படை தோற்றது. பகைவரை அழிப்பதற்கு புட்பத்தை சக்திவேலாக்கி நல்லியக் கோடனுக்கு உதவியளித்தமையால் முருகக் கடவுள் அன்றிலிருந்து "புட்பாஸ்திர மூர்த்தி" எனும் நாமத்தைப் பெற்றிருந்தார். இதே போல் மது என்னும் அரக்கனுக்கும் திருக்கார்த்திகை தினத்தில் முருகப்பெருமான் திருவருட்டுணையைக் கொடுத்ததற்கும் ஓர் கதையுண்டு. இதுவும் இவ் ஈழத்திலேயே இடம்பெற்றிருந்தது. சுக்கிரவார விரதம், ஷஷ்டி விரதம், கார்த்திகை தினத்தில் முருகப் பெருமான் திருவருட்டுணையைக் கொடுத்ததற்கும் ஓர் கதையுண்டு. இதுவும் இவ் ஈழத்திலேயே இடம்பெற்றிருந்தது. சுக்கிரவார விரதம், ஷஷ்டி விரதம், கார்த்திகை விரதம்

என்றெல்லாம் விதந்து கூறப்படும் ஸ்கந்த விரதங்களை முறையாக அனுஷ்டித்து முருகக் கடவுளிடத்தில் ஆன்ற பக்தியைக் கொண்ட "காலநேமி"; அசுர வேந்தனின் வழித்தோன்றலான 'மது' என்பான் ஈழத்தின் மத்திய பாகத்தில் அரசு செலுத்தி வருங்காலை ஒருநாள் தவஞ்செய்யும் நோக்கோடு கதிரைமலைச் சாரலிற்கு ஏகினான். "தவத்தால் எதையும் அடையலாம். ஆகவே யான் விரும்பியதோர் வரமுண்டு, எனது விருப்பம் நிறைவேற முருகப் பெருமானின் திருவருளை நினைந்து தவஞ் செய்கின்றேன்" என்ற மேற் சங்கல்பத்துடன் பலகாலம் தவ வாழ்க்கையைக் கொண்டான். பேரானந்தத்துடன் மது அரக்கனுடைய தவத்தை ஏற்ற முருகக் கடவுள் மதுவின் முன்தோன்றி "உனக்கு வேண்டியது யாது?" என வினாவ, மதுவரக்கன் மனமகிழ்ந்து நமஸ்கரித்து "மறைமுதல்வா! இராவணன் ஆளும் இலங்கையை அடியேன் தனித்து ஆளவேண்டும், தேவரீர் எனக்குக் காவலாக வரவேண்டும்; அன்புடைய மனையாளும் வேண்டும்; இராவணன் ஆதியோர் என்னைப் போற்றவும் வேண்டும்" என்றான். முருகப் பெருமான் திருவுளமிரங்கி "மதுவே! தசரத இராமனால் இராவணன் வேரற அழிவான், பின்னர் நீ இலங்கை முழுவதையும் பெறுவாய். மாலியவான் மகளான "கும்பநிசி" என்னும் மங்கை நல்லாள் இராவணனது அந்தப்புரத்திலே வளர்கிறாள். இது நல்ல சமயம், இப்போதே ஆங்கு சென்று அவளைக் கவர்ந்து நின் ஊர் செல்லுதி,. உனக்காக வேண்டிய துணைகள் தரலாம்" என்று கூறி மறைந்தருளினார். மது மிகுந்த மகிழ்ச்சி பெற்று முருகப் பெருமானையே மனதில் தியானித்துக் கொண்டு இராவணனது அந்தப்புரமேகி அங்கு எதிர்த்தோரை வீழ்த்தி "கும்பநிசி" மங்கையை வெகு இலகுவாகக் கவர்ந்து தனதூரான "மது வாட்சி"க்கு ஏகினான். மது என்பவனால் ஆளப்பட்டதால் அப்பிரதேசம் "மதுவாட்சி" எனலாயிற்று. இப்போது இப் பெயர் திரிந்து மதவாச்சி எனலாயிற்று. (இது இன்று வடமத்திய மாகாணத்தில் உள்ளது). இவ்வேளையில் போர் மல்லர்களான இந்திரசித்து முதலியோர் 'நிகும்பலை' எனுமிடத்தில் (தற்போதைய நீர்கொழும்பு) சிவபிரானை நினைந்து தவஞ்செய்து கொண்டிருக்கையில், இராவணன் திக்குவிஜயத்திலே ஈடுபட்டிருந்தான். கும்பகர்ணனோ ஆழ்ந்த நித்திரை, ஏனையோர் மதுவீன் வலிமைக்குப் பின்னிட்டனர். இவ்வளவு வசதியானதோர் சூழ்நிலையிலேயே "மதுவரக்கன்" கும்பநிசி மங்கையைக் கடத்தியிருக்கின்றான் என்ற செய்தியை விபீடணன் இராவணனது கவனத்திற்குக் கொண்டுவரவும், அவ் வேந்தனும் சீற்றங்கொண்டு, மதுவரசனது கோட்டையை வளைத்தான். முருகப் பெருமான் மேல் அளவு கடந்த பற்றுள்ள மதுவரசன் இராவணனது செயலை நினைந்து எம்பெருமானைச் சிந்தனை செய்யவும், "காமன்" எனும் பூதகணத் தலைவன் மதுவரசனுக்கு அனுசரணையாக வந்து போரிட, இராவணனது படை வலிமை குன்றிப் பின் வாங்கியது.

இவ்வேளைளயில், கும்பநிசி இராவணனிடம் அணுகி முருகக் கடவுள் மதுவுக்கு ஈந்த அருளையும், அருளால் பெற்ற பெருமைகளையும் கூற, இராவணன் பகைமையை நீக்கி மதுவரசனோடு சமாதானமாகி நண்பனானான். சில காலஞ் செல்ல இராவணனது கொடுஞ் செயல்களை

நோக்கி மதுவரசன் மனம் நொந்திருக்கையில், இராமபிரானால் இராவணன் மாண்டதும், இலங்கை முழுவதும் மதுவரசனே ஆட்சிபுரிந்து சில காலத்தின் பின் கந்தவேலுலகம் சேர்ந்தான். மதுவசரனுக்குத் திருவருள் பாலித்தமையினால் முருகக் கடவுளுக்கு "மதுகாவலமூர்த்தி" என்ற நாமம் உண்டாயிற்று. (கூர்மபுராணம் அகத்தியர் இராவணன் மரபுரைத்த அத்தியாயம்).

ஈழநாட்டிலே இன்றும் பெரும்பான்மையினரான இரு சமூகங்களும் முருகப் பெருமானைப் போற்றியும், வாழ்த்தியும் வணங்குகிறார்கள். கார்த்திகை மாதத்துக் கார்த்திகையில் முருகப் பெருமானை நினைந்து மிகுந்த பக்தி சிரத்தையோடு விரதங்கள் பல அனுஷ்டித்தும் நெய் விளக்கேற்றியும், இன்னும் பலவிதமானபடி தீப ஆராதனை செய்து வணங்குபவர்கள், யாக பலன்களைப் பெற்று முக்தியடைவார்கள் என கந்தபுராணம், திருச்செந்தூர் புராணம் ஆகியன விதந்து கூறுகின்றன. ஆகவே நாமனைவரும் திருக்கார்த்திகை விரதத்தையும் அனுஷ்டித்து முருகக் கடவுளின் திருவருட்டுணைக்கு ஆளாகுவோமாக. இது கூட தீப தரிசனமாகிறது.

கார்த்திகை நக்ஷத்திரத்துடன் சந்திரன் கூடிநிற்கும் காலம் கார்த்திகை எனப்படும். இந் நக்ஷசத்திரம் விஷ குணாங் கொண்டது. ஆகவேதான் சைவசமயிகள் அன்றைய தினங்களில் உபவாசமிருந்தும் விரதங்கள் அனுஷ்டித்தும் பிரார்த்திப்பர். இத்தினத்தில் எண்ணெய் ஸ்நானம் மற்றும் முக்கிய கருமங்கள் ஆற்றக் கூடாதென விதிகளும் உண்டு.

சூரபத்மனால் இடர்ப்பட்ட தேவர்களை உய்விக்கும் பொருட்டு சிவபிரானது நெற்றிக் கண்ணூடாகத் தோன்றிய ஆறு தீப்பொறிகளும் சரவணப் பொய்கையிற் சேர்க்கப் பட்டதும் அவை ஆறு குழந்தைகளாகத் தோன்றின. அக்குழந்தைகளைக் கார்த்திகைப் பெண்கள் அரவணைத்துப் பாலூட்டி வளர்த்து வருங்காலை உமாமகேசுவரர் எழுந்தருளி அக்குழந்தைகளை எடுத்தணைக்கவே அவை ஒன்றாகி 'ஸ்கந்தன்' என்ற நாமமும் பெற்றார். ஒளிவடிவாகிய கார்த்திகேயனை அனைத்து கார்த்திகைப் பெண்கள் வழிபட்டதனால் இத்தினம் குமரப் பெருமானுக்கு உரியதாயிற்று. கார்த்திகைப் பெண்களால் பாலூட்டி வளர்க்கப்பட்டமையால் "கார்த்திகேயன்" என்ற நாமமும் முருகப் பெருமானுக்கு வழங்கப்பட்டது. குமரப் பெருமான் வீற்றிருக்கும் ஆலயங்களிலெல்லாம் இத்தினத்தை "திருக் கார்த்திகை" என்றும், உற்சவங்களை "குமாராலய தீபோற்சவம்" என்றும் வழங்கப்பட்டது. ஆராதனைகள் தொடர்ந்து வளர்கின்றன.

மகாபலிச் சக்கரவர்த்தி தானதர்மங்கள் செய்வதில் வல்லவனாயிருந்தும் அசுரகுலத் தலைவனானபடியால் தேவர்களுக்குப் பாதகமாவே ஆட்சி செய்து வந்தான். தேவுலகைக் கைப்பற்றும் நோக்கமாக ஓர் யாகஞ் செய்து கொண்டிருக்கையில், விஷ்ணு, தேவர்களை இரட்சிக்கும் பொருட்டு இச் சக்கரவர்த்தியை மடக்க எண்ணி ஓர் குறள் வடிவெடுத்து சக்கரவர்த்தி முன் சென்று "நான் தவஞ்செய்வதற்கு மூன்றடி நிலம் தருக" என இரந்தார். தானதர்மங்கள் செய்வதில் வல்லவனான இச் சக்கரவர்த்தி, "நீ தவஞ்செய்வதற்கு வேண்டிய

மூன்றடியையும் விரும்பியவாறு பெற்றுக் கொள்" எனக் கூறலும், விஷ்ணு பெரிய தோர் உருவமெடுத்து சுவர்க்கம், பாதாளம் ஆகிய உலிகினைத் தமது ஈரடிகளாலும் மூன்றாம் அடிக்கு இட மில்லாததால் சக்கரவர்த்தியின் சிரசிலும் பாதத்தை வைத்து அமிழ்த்தினார். இதனோடு மகாபலிச் சக்கரவர்த்தியின் பெருவாழ்வும் பூர்த்தியானது. தேவர்கள் உய்ந்தனர். கார்த்திகை மாதத்து பூரணை யில் இச் சம்பவம் நிகழ்ந்தமையினால் இத்தினத்தை மகாவிஷ்ணுவுக்கு உடமை யாக்கி எங்கெல்லாம் விஷ்ணுமூர்த்தி கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கி றாரோ அங்கெல்லாம் 'விஷ்ணுவாலய தீபோற்சவம்' என ஆராதனைகள் இடம்பெறுகின்றன.

ஒருகால் உலகெங்கும் ஊழிக்காலம் ஒழிந்து பெரும் அழிவு உண்டானபோது விஷ்ணு நீரின் மேல் துயின்றிருக்கும் வேளை; மாயத்தால் மயக்கப்பட்ட பிரம்மா அவ்விடம் வந்து விஷ்ணுவை எழுப்பி "நீ யார்" என வினவினர். துயிலெழுந்த விஷ்ணு பிரம்மாவைப் பார்த்து "என் மகவாகிய சிறந்த பிதா மகனே! உனது வரவு நல்வரவாகுக" எனக் கூறலும், பிரம்மா சீற்றம் கொண்டு படைப்பிற்கும், காப்பிற்கும் காரணனாயும் சகல உலகத்தையும் சிருஷ்டிப்பவனாயும், பிரபஞ்சத்தை இயக்கு பவனுமாகிய என்னை இழிவுபடுத்தி மகவே, மகவே என்றழைக்கிறாயே! காரணம் யாது? சொல்", என வினவினார். விஷ்ணு வானவர் "யானே உலகங்களைப் படைத்தும், காத்தும் அழிப்பவன். அழிவில்லாத இந்த எனது உடம்பிலேயே நீயும் பிறந்தாய். முத்தொழில் புரிந்து முதன்மையாகிய என்னை நீ நன்றாக உணர்தி" என்றார். இருவருக்கும் யார்முதல்வன் என்ற சொற்போர் மூண்டது. இதே வேளை அங்கு பேரொளியுடன் பிரமாண்டமானதோர் தீக்கொழுந்து தோன்றியது. இத் தீக்கொ ழுந்தின் தோற்றம் அதன் அடி முடி எங்குள்ளதென்ற ஆராய்வும் ஆரம்பமானது. பிரம்மா அன்னப்பட்சியூடாகவும், விண்ணு பன்றியூடாகவும் முறையே தீக்கொழுந்தின் முடியையும், அடியையும் தேட ஆரம்பித் தனர். எவரும் அடி முடி காணாதவர்களாய் "இது சிவன் செயல்" என நினைத்து தத்தம் இறுமாப்புகளை ஒழித்து சிவலிங்க ரூப மாகிய அக்கினிக் குழம்பை வழிபட்டனர். தத்தம் ஆணவ கர்மங்களையும் நீக்கினர். கார்த்திகை மாதத்துப் பூரணையன்று இச்சம்பவம் நிகழ்ந்தமையினால், ஆண வத்தின் நிமித்தம் சிவபிரானை மறந்து இடர்படுவோரெல்லாம் சகல ஆலயங் களிலும், சாலைகளிலும், இல்லங்களிலும் தீபவழிபாட்டையாற்றி சிவபிரானைத் துதிசெய்வார்கள். இதனை 'விளக்கீடு' எனவும் கூறுவர். திருஞானசம்பந்த சுவாமிகளது தேவாரத்திலும் விளக்கீடு என்ற பதம் குறிக்கப்பட்டுள்ளது.

**வளைக்கை மடநல்லார் மாமயில வண் மறுகில்**
**துளக்கில் கபாலீச் சரத்தான் தொல் கார்த்திகைநாள்**
**தளத்தேந் தினமுலையார் தையலார் கொண்டாடும்**
**விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்**

ஆலயம் முதல் இல்லறமீறாகவுள்ள சந்நிதானங்களிலும் பூசைகள், யாகங்கள் மற்றும் பல சைவக் கிரியைகளிலும் வழிபடுதல் சிறந்த புண்ணி யத்தைத் தரும் சரியை வழிபாடாகும். தீபமில்லாத இடம், தீபமில்லாத கிரியைகள் கிரியைகள் யாவும் உயிரில்லாத உடம் பிற்கு சமமாகுமென வேத சிவாகமங்கள் கூறுகின்றன. இறைவனுக்கு முப்பத்திரண்டு,

பதினாறு என்ற வகையில் நடாத்தப்படும் பூசை வழிபாட்டில் தீபம் பிரதான பங்கை ஏற்கிறது. தீபாராதனையில்தான் பக்தனானவன் இறைவன்பால் ஈர்க்கும் அருட்சக்தியையும் பெறுகிறான். சைவசமயச் சார்புள்ள எந்தக் கிரியையிலும் தீபமேற்றுதல் அவசிய கர்மமாகுமென வேத சிவாகமங்கள் இயம்புகின்றன.

ஓர் பிறப்பில் எலியானது சிவாலயத்திலுள்ள விளக்கில் இட்டுவைத்த நெய்யை உண்ணுவதற்குத் தயாரானது. அப்போது மங்கியிருந்த தீபச்சுடர் அதன் முகத்தில் சுடவும், அதனால் எலியானது முகத்தை உதறித் தள்ளியபோது அத்திரிச் சுடர் தூண்டப்பட்டு தீபம் ஓங்கிப் பிரகாசித்தது. இதனால் அந்த எலி தன்னை அறியாமல் தீபச்சுடரை பிரகாசிக்கச் செய்த பலனால் அடுத்த பிறப்பில் மகாபலிச் சக்கரவர்த்தியாகப்பிறந்து சகல ஐஸ்வரியங்களையும் பெற்றுப் பெருவாழ்வைப் பெறும் பாக்கியத்தைப் பெற்றது. மங்கிய தீபத்தைப் பிரகாசிக்கக் கூடியதாகச் செய்த எலியின் செயல் அமைந்திருப்பினும் சிவத்திரவியமான நெய்யை உண்டமையினால் சிறிது குற்றப்பட்டு மகாபலிச் சக்கரவர்த்தியாகியதும் திருமாலின் படிற்றுச் செய்கையினக்கப்பட்டான். இதனால் மெய்யன்புடன் மிகுந்த பக்தியுடன் தீபமிடுகின்றவர் அடைகின்ற பலன் எத்தகையதென்பதைச் சொல்லவும் வேண்டுமா!

பலவிதமான தீபங்களை அவரவர் தமக்கு இயைந்தபடி உருவகம் செய்ய சைவசமய அனுட்டானங்களிலும் பல வாய்ப்புகளுண்டு. பிரகாசிப்பித்தல்" இதுவே தீப மகிமையாகும். பசுவின் நெய்யினால் நிறைக்கப்பட்டதும் கற்பூரம், அகில் என்னுமிவை சேர்க்கப்பட்டு திரிக்கப்பட்ட இழைகளை உடையதும், பருத்தி நூல், தாமரைத் தண்டுகளிலிருந்து பெறப்படும் நூற்றிரி கொண்டும் தீபங்களை ஏற்றுவதும் உத்தமமாகும். இப்படியான தீபங்கள் சாத்வீக எனப்படும். வெள்ளாட்டு நெய், நல்லெண்ணெய் கொண்டு ஏற்றும் தீபம் தீபம் இராசத தீபம் எனப்படும். எருமை நெய் கொண்டு இடும் தீபம் தாமத தீபமாகும். விருட்ஷங்களின் விதைகளில் உற்பத்தியான நெய் கொண்டு இடும் தீபம் பைசாச தீபம் எனப்படும். தீபங்கள் யாவும் மூன்று அங்குலத்துக்கு மேலாக வளர்ந்து எரிவது உத்தமோத்தமமாகும். பூசைகளின் போது வாத்ய தொனிகளுடனும் நைவேத்தியாதிகளுடனும், நிருத்த கீதங்களுடனும் எண்ணிறகடங்காத தீபங்களை ஏற்றி வழிபடின் அதனால் பெறும் பேறு அனந்தம் அனந்தம்.

தீபம் ஆக்னேய உபசாரங்களில் ஒன்றாகும். அக்கினியானது அருவமாவும், உருவாகவும் இருத்தல் போல இறைவனும் அருவமாகவும், உருவமாகவும் இருக்கின்றார். அக்கினி ஒன்றைப்பற்றி பலவாக தோன்றுதல் போன்று பரமபதியும் அன்புருகிய இடத்தில் நம்பிக்கையாகத் தோன்றுவார் என்பது உண்மை. ஓர் விளக்கிலிருந்து வேறொரு விளக்கிற்கும் அதிலிருந்து பல்வேறு விளக்குகளுக்கு தீபச் சுடர்கள் தோன்றுவது போல தத்துவம் கடந்த இறைவனும் ஆன்மாக்களை அநாதியே பந்தித்த ஆணவாதி மலங்களையும் நீக்கி அத்துவித இன்பமாகிய சிவ சாயுச்சியத்தை அளித்தற்குச் சிவமாகியும், சக்தியாகியும், நாதவித்துக்களாகியும், சதாசிவன், மகேஸ்வரன், உருத்திரன்

முதலான அளவற்ற உருவங்களைக் கொண்டு பஞ்ச கிருத்தியங்களை இயற்றுகின்றான். இவ் உண்மை ஒருமுகம், மும்முகம், பஞ்சமுகமும், இத்தியாதி போன்ற தீபங்கள் மூலம் உணர்த்தப்படு கின்றது.

தீபம் எனும்போது அது இறைவனது திருவருள் வடிவாகிய சிவசக்தியின் குறியாம் என்பது புலப்படும். தீபம் இருளை நீக்குவது போல தீபம் போன்ற ஞானமானது அஞ்ஞான இருளை நீக்கு கிறது என்பதாகும். ஆலயம் தேகமாகவும் தேகத்தினுள் தகளிபோல இருப்பது மனமாகவும், அத்தகளியில் நெய்யை நிறைப்பது போல இவ் மனத்தகளியிலும் *உண்மை உணர்வாகிய* நெய்யை நிறைத்துத் தாமரை நூல் திரியிடுதல் போன்று உயிரென்னும் திரியையிட்டுப் பிராணன் எனும் காற்றை நிறுத்தி அன்பெனும் தூண்டுகோல் கொண்டு சிவஞானம் என்னும் தீபத்தை ஏற்றின் எமது மலவாசனைகள் அகன்று சிவ தரிசனம் பெறலாம். அத்தரிசனத்தைக் கார்த்திரிகை மாதந்தோறும் கார்த்திகை நாட்களிலும் முக்கியமாகக் கார்த்திகை மாதத்தில் வரும் திருக் கார்த்திகை யிலும், சிவராத்திரி தினங்களிலும் தரி சித்து வேண்டிய பலன்களைப் பெறலாம்.

கார்த்திகை தீபமும் இதனைத் தரி சிக்கும் கண்களின் ஒளியும் இரண்டற அத்து விதமாக விளங்குதல் போல சிவபெரு மானாகிய பசுபதியும் ஆன்மாக்களும் விண்ணில் முதல் உயிர்" என்னின்றவர் போல அத்துவிதமாக விளங்குகின்றனர்.


**உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகழியாக**
**மடம்படு முணர் நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி**
**இடம்படு ஞானத் தீயாலெரிகொள விருந்தநோக்கில்**
**கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.**
**உளதி லுயிர்ப்பை யொடுக்கி யொண்டசுர்**
**ஞான விளக்கினை போற்றி"**

தொல்காப்பியம் புறத்தினையில் 85ம் சூத்திரத்தில்


**"மைமிசை யின்றி மலைவிளக்குப் போலோங்கி**
**செம்மயி லின்றிலங்குந் தீபிகை – தெம்முனையுள்**
**வேலினுங் கேடாது வேந்தன் மனைவிளங்கக்**
**கோவினுங் கோடா கொழுந்து"**

எனக் கார்த்திகை தீபத்தின் பெருமையை எடுத்துக் காட்டினார். தீப தரினம் உலகந்தோன்றிய காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது.

# திருச்செந்தூர் கந்த ஷஷ்டி பெருவிழா - 2012




முனைவர் நித்தியானந்தன் செஞ்சொற் செல்வரைக் கௌரவிக்கும் காட்சி.



திருச்செந்தூர் தேவஸ்தான இணை ஆணையர் T. தர்சனன் அவர்கள் செஞ்சொற் செல்வரை கௌரவிக்கும் காட்சி.







கந்தஷஷ்டி உற்சவ காலத்தில் நடைபெற்ற சொற்பொழிவுக் காட்சிகள்... இச் சொற் பொழிவுக்காக துர்க்காதேவி தேவஸ் தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் அழைக்கப்பட்டார்.


*மீண்டும் பக்தி இசை நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றப்படுகின்றன. இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை அரற்கேற்றிய "கண்டனன் சீதையை" இசைநாடகக் காட்சிகள்.......*







*5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் அபிராம், தாய் தந்தையுடன் துர்க்காதேவியிடம் ஆசி பெற்றார்.*



*கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் பாதுகாக்கப்படும் எருது. இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்ட இவ் எருதை சைவ அபிமானிகள் மீட்டு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் ஒப்படைத் துள்ளனர்.*

# கயமுகாசுர சங்காரமூர்த்தி

**அச்சுவேலி ச. குமாரசாமிக் குருக்கள் அவர்கள்**

கயமுகாசுரனுடைய ஏவல் செய்து மனம் வருந்திய இந்திரன் முதலிய தேவர்கள் விநாயகக் கடவுள் திரு அவதாரம் செய்தமையை அறிந்து, மகிழ்ந்து, திருக்கைலாச மலையை அடைந்து, அவருடைய திருவடிவகளை வணங்கித் துதித்தார்கள். அத்தேவர்களுள் இந்திரன், "வேத ஒழுக்கங்களை நீக்கி, மிகக் கொடுந்துன்பங்களைச் செய்கின்றவனாகிய கயமுகாசுரடைய உயிரையும் எங்களுடைய குறையையும் நீக்கும்படி தேவரீர் வருவீர் என்று எங்களுக்குப் பரமசிவன் அருளிச் செய்தார்; ஆகையால் தேவரீரை அடைந்தோம்; எங்கள் துன்பத்தை நீக்கியருளுக" என்று பூசித்து வேண்டினான். விநாயகக் கடவுள், "அஞ்சற்க; அஞ்சற்க; கயமுகாசுரனைச் சங்காரம் செய்து, உங்களுடைய துன்பத்தை நீக்குவோம்" என்று கிருபை செய்தார். அத் திருவாக்கைக் கேட்ட தேவர்கள் "எங்களுடைய துன்பம் நீங்கியது; மறுமை இன்பங்களையும் அடைந்தோம்" என்று கூறி மகிழ்ச்சியுற்றார்கள்.

விநாயகக் கடவுள் கயமுகாசுரனைச் சங்காரம் செய்யத் திருவுளம் கொண்டு, திவ்விய சிங்காசனத்திலிருந்தெழுந்து, வாசலில் வந்து அசலன் என்பவனது தோளின் மீதேறிப் போருக்குச் சென்றார். பூதசேனைகள் வந்து சூழ்ந்து, அவருடைய புகழ்களைச் சொல்லித் துதித்தும், சாமரைகளை வீசியும், குடைகளை ஏந்தியும், பூக்களைத் தூவியும், பலவகைப்பட்ட வாத்தியங்களை இயம்பியும் சென்றார்கள். விநாயகக் கடவுள் மதங்கமாபுரிக்கு எதிரில் போனார். அதனைத் தூதர்களால் அறிந்த கயமுகாசுரன் கோபமுற்று விரைந்தெழுந்து, யுத்தகோலம் உற்றவனாய்த் தேரில் ஏறி, ஆயிரம் வெள்ளம் சேனைகள் சூழ, யுத்தகளத்தை அடைந்தான். பூதர்கள் அவுணர்களோடு எதிர்த்து யுத்தம் செய்து வெற்றியடைந்தார்கள். அதனைக் கண்ட கயமுகன் வில்லை வளைத்துப் பாணங்களைச் செலுத்தப் பூதர்கள் யாவரும் வருந்தி வலிமை கெட்டுப் புறம் கொடுத்தார்கள். விநாயகக் கடவுள் கயமுகாசுரனை அணுகினார். கயமுகாசுரன் தேருடன் விநாயகக் கடவுளுடைய திருமுன்னிலையை அடைந்து, கோபித்துப் பார்த்து, "மைந்தனே! உன் பிதா நான் செய்த தவத்தை நோக்கி, எனக்குப் பல வரங்களைத் தந்தார். விட்டுணு முதலிய தேவர்களும் மற்றையோர் யாவரும் போரில் வந்து எதிர்த்தால் அவர்கள் எனக்குப் புறம் தரவும், அவர்களது படைக்கலங்கள் ஒருங்கே வந்தாலும், அவைகளால் இறவாமலிருக்கும் பெரும் வலி பொருந்தவும், தேவர்கள் முதலிய வகுப்பினரால் இறவாதிருக்கவும். என்னை நிகர்த்த ஒருவன் வந்து போர் செய்யினும் அவனுடைய ஆயுதங்களாலும் அழியாதிருக்கவும் பெற்றுக் கொண்டேன். நீ இந்திராதி தேவர்களுடைய துன்பத்தை நீக்குபவன் போல என்னுடன் போர் செய்ய வந்தாய்; யான் உன்னை வென்று அவர்களுடைய உயிரையும் பருகுவேன்.

என்னோடு போர் செய்து வெற்றி கொள்வதற்கு முடிந்தவனாயின் வருவாய்" என்று கூறினான். சிவகுமார் அவனை அருளோடு நோக்கி, "கயமுகனே! முன்னாளிலே உனக்குப் பலவரங்களையும் தந்த நமது பிதாவே உன்னைச் சங்காரம் செய்து, இந்திரன் முதலிய தேவர்களது துன்பத்தை நீக்கிச் சுவர்க்கம் முதலிய உலக ஆட்சியைக் கொடுத்து வரும்படி எமக்குக் கட்டளையிட்டு அருளினார். சுவர்க்க உலகத்தை இந்த இந்திரன் அரசு செய்ய விடுத்து, நீ இம் மண்ணுலகத்தில் அரசு செய்திருப்பாயாக; அது உனக்கு முடியாதாயின் நாம் உன்னுயிரைக் கவருவேன்; உன்னுடைய எண்ணம் யாது? சொல்வாய்" என்றார். கயமுகாசுரன் அக்கினி சொரியப் பார்த்து விரைந்து ஒரு வில்லை வளைத்துப் பாணங்களைச் செலுத்தினான். விநாயகக் கடவுள் ஓர் எழுப்படையினால் அவைகளைச் சிதறடித்துப் பின், அதனால் அவன் வில்லையும் முறித்தார். அவன் வேறொரு வில்லை எடுத்து வளைக்க, அதையும் அழித்தார். கயமுகன் ஒரு தண்டாயுதத்தை எடுத்துக் கொண்டு எதிர்த்தான். அவர் எழுவினால் அத்தண்டையும் அடித்து அழித்து, அவ்வெழுவினால் அவனுடைய மார்பில் அடித்தார். அவன் செயலற்று மனம் நடுங்கி, ஒன்றும் பேசாதவனாய் நாணமுற்று ஒடுங்கி, இறந்தவனுக்குச் சமமாக நின்றான். விநாயகக் கடவுள் அவனுடைய சேனைகளையும் அழிக்கத் திருவுளம் கொண்டு, ஒரு பாசத்தை வீசினார். அது அவனுடைய சேனைகளைக் கட்டியது. அதன்பின் கணிச்சியைச் செலுத்த, அது அச் சேனைகளைக் கொன்றது. கயமுகாசுரன் பதை பதைத்து, மனம் வருந்தித் தன்னிடத்துள்ள படைக்கலங்கள் எல்லாவற்றையும் செலுத்தினான். அவைகள் கடவுளை வலம் செய்து துதித்துக் கட்டளையின்படி நின்றன. கயமுகாசுரன் கோபம் அதிகரிக்க, பேசாது நின்றான். சிவகுமாரர் அவனை நோக்கி, நாம் ஆயுதங்களைச் செலுத்தினால், நமது பிதா கொடுத்த வரத்தினால் அவைகள் எல்லாம் இவனைக் கொல்ல மாட்டா என்று சிறுபொழுது சிந்தித்துத் தம்முடைய திருக்கோட்டில் ஒன்றைத் திருக்கரத்தால் முறித்துக் கயமுகாசுரன் மீது விட்டார். அது அவனுடைய மார்பைப் பிளந்து விரைந்து சென்று, கத்தோதக சமுத்திரத்தில் மூழ்கி, அவனுடைய திருக் கரத்தில் வந்து வீற்றிருந்தது. கயமுகன் ஆரவாரித்துத் தேர்மேல் வீழ்ந்து மயங்கினான். அவருடைய மார்பில் இருந்து நதிபோலப் பெருகிய இரத்தவெள்ளம் பக்கத்திலுள்ள ஒரு காட்டிற் புகுந்தமையால் அவ்விடம் திருச்செங்காடு என்னும் பெயர் பெற்று, இன்னும் யாவரும் காணும்படி இருக்கின்றது.

சிவபெருமான் கொடுத்த வரத்தினால் இறவாத கயமுகன் வீழ்ந்து இறந்தவன் போன்று, பழைய வடிவை விட்டு ஒரு பெருச்சாளிவடிவம் கொண்டு, விநாயகக் கடவுளைத் தாக்கும்படி வந்தான். அவர் அவனுடைய போர்வலிமையை நீக்கி, அசலன் என்னும் பூதனுடைய தோளில் இருந்து இறங்கி, "நீ எம்மைச் சுமப்பாயாக" என்று அவனுடைய பிடரில் தாவி வீற்றிருந்து, அப்பெருச்சாளி வாகனத்தைச் செலுத்தி அருளினார்.

அதனைக் கண்ட பிரமா, இந்திரன் முதலிய தேவர்கள் கயமுகாசுரன் இறந்தான்; நம்முடைய இடர் போயிற்று; பகையும்

தீர்ந்தது என்று ஆடிப்பாடி விநாயகக் கடவுளுடைய திருமேனி மறையும் வண்ணம் பூமழை பொழிந்து நின்று,

**"காப்பவன் அருளும் மேலோன் கண் அகன் ஞாலம்**
**– யாவும்**
**தீப்பவன் ஏனைச் செய்கை செய்திடும் அவனும் நீயே**
**ஏப்படும் செய்கை என்ன எம(து) உளம் வெதும்பும்**
**–இன்னல்**
**நீப்பது கருதி அன்றோ நீ அருள் வடிவம் கொண்டாய்"**

**"உன்னிடைப் பிறந்த வேதம் உன்பெரு நிலைமை தன்னை**
**இன்னதென்(று) உணர்ந்ததில்லை யாம் உனை அறிவ(து)**
**– எங்கன்**
**அன்னையும் பயந்தோன் தானும் ஆயினை அதனான்**
**– மைந்தர்**
**பன்னிய புகழ்ச்சி யாவும் பரிவுடன் கேட்டி போலாம்"**
**– கந்தபுராணம்**

என்று சொல்லி வணங்கித் துதித்து, முகமலர்ச்சியுள்ளவர்களாய் மூத்த பிள்ளை யாரை வந்து சூழ்ந்தார்கள். அக்கடவுள் அவர்களுக்குக் கருணையோடு பேரருள் புரிந்தார். பிள்ளையார் போரில் இறந்த பூதர்களை நோக்கி, "எழுக" என்று அருளிச் செய்ய, அவர்கள் எல்லோரும் எழுந்து, ஹர, ஹர என்று துதித்து, அவரை வணங்கி சூழ்ந் தார்கள். பூதர்கள் மதங்காபுரியிற் போய், ஆயுத பாணிகளாயுள்ள அவுணர்களைக் கொன்று, போர்க்களத்திற்கு மீண்டு வந்தார்கள்.

பிள்ளையார் போர்க்களத்தை நீங்கித் திருச்செங்காட்டில் போய், சிவலிங்கப் பிரதிட்டை செய்து பேரன்போடு பூசித்துத் துதித்தார். அத்தலத்தை மேலோர் கணபதீச்சுரம் என்று வழங்குவர்.

விநாயகக் கடவுள் பின்னர் பெருச்சாளி வாகனத்தில் ஏறி, தேவர்கள் சூழ விட்டுணு பாம்பு வடிவாயிருக்கும் வனத்தை அடைந்து, அவருடைய சாபத்தை நீக்கி, அவ்விட்டுணுவும் பிரமா முதலிய தேவர் களும் வணங்க, பெருச்சாளி வாகனத்தில் ஏறி, பூதசேனைகள் சூழத் திருக்கைலாச மலையை அடைந்து, தமது இடத்தில் வீற்றிருந்து அருளினார்.

அத்தினத்தில் விட்டுணு முதலிய தேவர்கள் விநாயகக் கடவுளை வணங்கி அவர் முன் நின்று, எம்பெருமானே! எங்களை இடர்ப்படுத்திய கயமுகா சுரனைத் தேவரீர் சங்காரம் செய்தமை யால் நாம் உய்ந்தோம். நாங்கள் நேற்று வரையும் அந்தக் கயமுகாசுரனுக்கு எதிரே தவறாமற் செய்த தொண்டை இன்று முதல் தேவரீருடைய சந்நிதானத்தில் செய் வோம்" என்றார்கள். பிள்ளையார், "அவ்வாறு செய்வீர்" என்றார். தேவர்கள் அன்பினோடு முட்டியாகப் பிடித்த இரு கரங்களினாலும் தங்கள் தங்கள் சிரசுகளில் மும்முறை குட்டி, இரண்டு கைகளையும் எதிர் எதிராக மாற்றி, இரண்டு காதுகளையும் பிடித்துக் கொண்டு, கணைக்காலும் தொடையும் ஒன்றை யொன்று தொடும்படி மும்முறை தாழ்ந் தெழுந்து, வணங்கி நின்றார்கள். விநாயகக் கடவுள் மகிழ்ந்தார். "இன்று முதல் உல கத்தில் உள்ளோர் எவரும் எங்களைப் போல இத்திருத்தொண்டைத் தேவரீரு டைய சந்நிதானத்தில் செய்துவர அருள் செய்யவேண்டும்" என்று தேவர்கள் வேண்டுதல் செய்தார்கள். அவர் "அவ்வாறே யாகுக" என்று அருள்புரிந்து, அவர்கள் யாவர்க்கும் விடைகொடுத்து அனுப்பினார். அவர்கள் தத்தம் பதவி களில் போய் மகிழ்ச்சியுடன் இருந் தார்கள். இச் சரித்திரம்,

**கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்**
**கயாசுரனை அவனால் கொல்வித்தார் போலும்**
**செய் வேள்வித் தக்கனை முன் சிதைத்தார் போலும்**
**திசைமுகன் தன் சிரமொன்று சிதைத்தார் போலும்**
**மெய்வேள்வி மூர்த்தி தலை அறுத்தார் போலும்**
**வியன்வீழி மிழலை இடம் கொண்டார் போலும்**
**ஐவேள்வி ஆறங்கம் ஆனார் போலும்**
**அடியேனை ஆளுடைய அடிகள் தாமே.**

**– திருநாவுக்கரசர் தேவாரம்**

எனவும்,

**பேசத்தகா(து) எனப் பேய் எருதும் பெருச்சாளியும் என்(று)**
**ஏசத்தகும்படி ஏறுவதே இமையாத முக்கண்**
**கூசத்தகும் தொழினும் கை உந்தையும் நீயும் இந்தத்**
**தேசத்தவர் கொழும் நாரைப் பதியுள் சிவக்களிறே.**

**– பதினொராந் திருமுறை**

எனவும்,

**நறைகொண்ட மலர்தூவி விரை அளிப்ப நாள் தோறும்**
**முறைகொண்டு நின்(று) அடியார் முட்டாமே பணிசெய்யச்**
**சிறைகொண்ட வண்(டு) அறையும்செங்காட்டங்குடி அதனுள்**
**கறைகொண்ட கண்டத்தான் கணபதிச் சரத்தானே.**

**– திருஞானசம்பந்தர் தேவாரம்**

எனவும், மிகச் சுருக்கி விளக்கப்பட்டமை காண்க. விரிவு கந்தபுராணத்தால் உணர்ந்து கொள்க.

கயமுக சங்காரத்தின் பொருட்டு முறிக்கப்பட்டதாகிய ஒரு கொம்பை ஏந்தியது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்குபவர் தாம் என்பதை அறிவிப்பதற்காகும். ஆன் மாக்களை அநாதியே பந்தித்த ஆணவ மலமாகிய யானையைப் பாசத்தால் கட்டி அங்குசத்தால் அடக்கி, மறைத்தல் என்னும் கிருத்தியத்தைச் செய்பவர் தாம் என்பதை உணர்த்துவதற்காகப் பாச அங்குசங்களை ஏந்தினர். ஆணவ உருவமாகிய கயமுக னுடைய சேனைகளைப் பாசத்ாற் கட்டிக் கணிச்சியால் அடக்கி, அவன் மலவலி கெட்டுப் பெருச்சாளி உருவமாக வர, நீங்காத ஞானத்தைக் கொடுத்துச் சுத்த னாக்கி வாகனமாம் பேற்றை அளித்து அடிமை கொண்டதனால், ஆணவமாகிய யானையை அடக்கி, ஆன்மாவை அடிமை கொள்ளுபவர் என்பது இனிது விளங்கும். கணபதியாகிய விநாயகக் கடவுளைப் பூசித்துப் பெறுதற்கு அரும் பேறு பெற்றவரும், அவரது திருவருளினாலே தெய்வப் புலமை கைவரப் பெற்றவரும் ஆன ஔவைப் பிராட்டியார்,

**"கோடு ஆயுதத்தால் கொடுவினை களைந்து"**

**– விநாயகர் அகவல்**

எனவும், கச்சியப்பர் முனிவர்,

**"கண்ணில் ஆணவ வெங்கரி பிணித்(து) அடக்கிக்**
**கரிசினேற்கு இருகையும் ஆக்கும்**
**அண்ணலைத் தணிகைவரை வளர் ஆபத் சகாயனை**
**அகம் தழீஇக் களிப்பாம்"**

**– தணிகைப் புராணம்**

எனவும், திருவாய் மலர்ந்த திரு வாக்குகள் பற்றியும் உணர்ந்து கொள் ளத்தக்கன.

**"காப்பவன் அருளும் மேலோன்"**

என்னும் செய்யுளால் விநாயகக் கடவுளே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்ச கிருத்திய சுதந்திரர் என்பதும், பிரமா முதலிய மூர்த்திகளுக்கு எல்லாம் முதல்வர் அவரே என்பதும் உணரப்படும். சிவபெரு மான் பஞ்சகிருத்தியபதி தாம் என்பதை ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களி னாலும் உணர்த்துதல் போல, விநாயகரும் துதிக்கை முதலிய ஐந்து திருக்கரங்களி னாலும் உணர்த்துகின்றார்.

**"உன்னிடைப் பிறந்த வேதம்"**

என்னும் செய்யுளால் ஆன்மாக்களின் பொருட்டு வேதாகமங்களைத் தோற்றுவித்து அருளியவர் அவரே என்பது முதலியனவும் உணரப்படும். குடிலையானது அகரம், உகரம், மகரம், விந்து நாதமாய்ப் பிரிந்து, அகரத்தில் இருக்கு வேதமும், உகரத்தில் யசுர் வேதமும், மகரத்தில் சாம வேதமும், விந்துவில் அதர்வண வேதமும் தோன்றின என்று வாயுசங்கிதை சொல்வது அறிக.

விநாயகக் கடவுள் ஒருபக்கக் கொம்பு உடையவராதலால் ஆண் போலவும், மற்றொரு கூறு கொம்பின்மையால் பெண் போலவும், இரண்டுங் கூடியமையால் அலி போலவும் விளங்குவதால், அவன், அவள், அது என்னும் ஆண் பெண் அலியாகிச்சரா சரங்களாகிச் சுத்த சுத்தாய், எல்லாமாய், அல்லவுமாய் யார்க்கும் சொல்லுதற்கு அரிதாய் விளங்கும் தற்பர சிவத்தின் இயல்பையும், அவர் கொண்ட கேவல வடிவம் இருபத்தைந்தினுள் ஒன்றாய்ச் சக்தி ஒரு கூறாகவும், சிவம் ஒரு கூறாகவும் அமைந்துள்ள அர்த்தநாரீசுவர மூர்த்தத்தின் தன்மையையும் தம் வடிவால் காட்டி அருளுகின்றார். அது

**"வெண்ணிலாக் கற்றை கான்று**
**விளங்கும் ஓர் பிறைக் கோடின்றி**
**எண்ணில் ஓர் பாகம் கூந்தல்**
**பிடியென இருந்தவாற்றால்**
**பெண்ணொரு பாகம் வைத்த**
**பிஞ்ஞகன் உருவு காட்டும்**
**அண்ணல் அங் களிநல் யானை**
**அடிமலர் சென்னி வைப்பாய்"**

**– கந்தபுராணம்.**

என அதிவீரராமபாண்டியர் கூறிய வாற்றால் தெளிவாக உணரப்படுகின்றது.

## பேராசை பெருநஷ்டம்

*கடவுளை நோக்கித் தவமிருந்தான் ஒரு பக்தன். அவன் பக்கத்திலேயே பேராசைக்காரன் ஒருவனும் கொட்டக் கொட்ட விழித்தபடி உட்கார்த்திருந்தான். பக்தனுக்குத் தரிசனம் தர இறைவன் வரும்போது, தவம் செய்யாமலே தானும் தரிசனம் செய்துவிடலாம் என்ற பேராசை அவனுக்கு.*

*பக்தனுடைய தவ வலிமையால் கடவுள் அவன் முன்பு தோன்றினார். பேராசைக் காரனுக்கும் தரிசனம் கிடைத்தது. இருவருக்கும் எதிரில் இரண்டு குடங்களை வைத்து, யாருக்கு எது தேவையோ அதை எடுத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு மறைந்தார் கடவுள். ஒன்று ஜொலிக்கும் தங்கக் குடம். இன்னொன்று மண் பானை.*

*பேராசைக்காரன் அவசரமாகத் தங்கக் குடத்தை எடுத்துக்கொண்டு ஓடினான். பக்தன் மண் பானையே போதும் எனத் திருப்தியடைந்தான்.*

*பிறகுதான் விபரம் தெரிந்தது பக்தனிடம் இருந்த குடம் தங்கத்தால் ஆனது. ஆனால், மேலே களிமண் பூசப்பட்டிருந்தது. பேராசைக்காரன் எடுத்துக்கொண்டு போன குடம் களிமண்ணால் ஆனது. ஆனால், சும்மா தங்க மூலாம் பூசப்பட்டது.*

# வெண்காட்டு முக்குள நீர்

**கி.வா. ஜகந்நாதன் அவர்கள்**

**பேய் அடையா பிரிவெய்தும்**
**பிள்ளையினோடு உள்ள நினைவு**
**ஆயினவே வரம் பெறுவர்**
**ஐயுற வேண்டா ஒன்றும்**
**வேயன தோள் உமைபங்கன்**
**வெண்காட்டு முக்குளநீர்**
**தோய் வினையார் அவர்தம்மை**
**தோயாவாம் தீவினையே**

திருஞானசம்பந்தப் பெருமான் பல தலங்களையும் தரிசித்து திருப்பதிகங்கள் பாடி திருவெண்காட்டுக்கு எழுந்தருளினார். திருவெண்காடு பழைய தலங்களில் ஒன்று. சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகில் விளங்கியது. வால்மீகி இராமா யணத்தில் அந்தத் தலச் செய்தி வருகின்றது. அங்கே சோமதீர்த்தம், சூரிய தீர்த்தம், அக்கினி தீர்த்தம் என்ற மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றை முக்குளம் என்று சொல்வார்கள். அந்தத் தீர்த்தங்கள் மிக்க புனிதமானவை. அவற்றில் மூழ்கினவர் தாம் வேண்டும் பொருள்களைப் பெறுவர் என்ற நம்பிக்கை அன்பர்கள் மனதில் நெடுங்காலமாக இருந்து வருகிறது.

திருவெண்காட்டுக்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தப் பெருமான் தமிழ் நாட்டில் உள்ள பல ஊர்களிலிருந்தும் அங்கே வந்து இறைவனை வழிபட்டதைக் கண்டார். அவர்களுடைய பக்தியையும் நம்பிக்கையையும் கண்டு இறைவன் கருணையை வியந்து மகிழ்ந்தார். அடியார்களை அணுகி விசாரித்தபோது ஒருவர் தம்முடைய மனைவியை நெடு நாட்களாக பேய் பீடித்திருந்ததாகவும் ஒரு பெரியவர் வெண்காட்டு முக்குளத்தில் நீராடிச் சுவேதாரணியேசுவரையும் பிரம்ம வித்தியா நாயகியையும் வழிபட்டால் இத்துன்பம் நீங்கும் என்று கூறியதை நம்பி இங்கே வந்து இக் குளத்தில் நீராடி வழிபட்டதனால் இத்தொல்லை நீங்கியது எனக் கூறினார்.

இன்னொரு அன்பர் பெரும் செல் வந்தர். தமது செல்வத்தை அனுபவிப்பதற்கு ஒரு பிள்ளை இல்லையே என வருந்தி தானமும் தவமும் புரிந்தார். கடைசியில் திருவெண்காட்டுக்கு வந்து முக்குள நீரில் தம்மனைவியுடன் நீராடிச் சில காலம் தங்கியிருந்தார். ஊர் சென்ற ஓராண்டில் அவருக்கு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு ஓராண்டு நிறைவுற்றது. திருவெண்காடன் எனப் பெயரிட்டு அக் குழந்தையும் தரிசனத்திற்காக வந்திருப்ப தாகக் கூறினார்.

அடுத்தபடியாக ஓர் அன்பர் தமக்கு நெடுநாட்களாக இருந்த நோய் முக் குளத்தில் நீராடியதால் போயிற்று எனக் கூறினார். இவ்வாறாக வறுமை நீங்கிச் செல்வம் பெற்றாரும், சண்டை நீக்கிச் சமாதானம் அடைந்தாரும், காணாமற் போன உறவினரை மீண்டும் காணப் பெற்றாரும், தாம் வேண்டிய கல்வித் துறையில் புலமை பெற்றாரும் பெற எண்ணி வழிபடுவாருமாகிய பலரைச்

சம்பந்தர் கண்டார். பாவம் போக்கி நினைத்தவற்றையெல்லாம் தரும் முக் குளத்தையும் திருவெண்காட்டப்பனை யும் கண்டு கண்டு உருகினார். தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தாம் பாடிய பதிகத்தில் இணைந்து பொழிந்தார்.

இப்பாட்டோடு தொடர்புடைய வரலாறு ஒன்று உண்டு அது வருமாறு –

நடுக்காட்டில் பெண்ணாகடம் என்ற தலத்தில் ஏறக்குறைய எழுநூறு ஆண்டு களுக்கு முன் அச்சுதக் காப்பாளர் என்ற வேளாளர் ஒருவர் இருந்தார். சைவ சமயத்தவர் அவருக்கு நெடுங்காலம் மக்கட் பேறே இல்லை. அதனால் மிக்க வருத்தத்தை அடைந்த அவர் தம்முடைய குலகுருவாகிய சகலாகம பண்டிதரிடம் போய் தம் குறை நீங்க என்ன செய்யலாம் என்று கேட்டார். அவர் உடனே தம் முடைய பாராயணத்தில் உள்ள தேவா ரத்தை எடுத்து கயிறு சாத்திப் பார்த்தார்.

பாரத இடத்தில் "பேயடையா பிரி வெய்தும்" என்ற இந்தப் பாசுரம் கிடைத்தது. இதில் "பிள்ளையினோடு உள்ள நினை வாயினவே வரம் பெறுவா" என்று இருப் பதைக் கண்டார். அச்சுதக் களப்பாருடைய குறைக்கு பரிகாரம் சொல்வதுபோல் பாட்டு அமைந்திருந்ததைக் கண்டு சகலாகம பண்டிதர் இறைவன் திருவருளை எண்ணி அதிசயித்து அச்சுத களப்பாளரை திரு வெண்காட்டுக்குச் சென்று முக்குளநீரில் நீராடி இறைவனை வழிபட்டுக் கொண்டு சிலகாலம் இருக்கும்படி பணித்தார். அவர் அவ்வாறு செய்து ஊர் திரும்பினார். அது தொடங்கியே அவர் மனைவி கருவுற்று ஓர் ஆண் குழந்தையை ஈன்றாள். திரு வெண்காட்டு மூர்த்தியை வழிபட்டதன் பயனாகப் பிறந்த குழந்தையாதலின் சுவேதவனப் பெருமாள் என்ற திருநாமம் சூட்டி வளர்த்தார்கள். அக்குழந்தையே பின்பு "சிவஞானபோதம்" என்னும் சைவசாத்திர நூலை இயற்ற சந்தனா சாரியார்களில் முதல்வராகத் திகழ்ந்த மெய்கண்டார். சைவசித்தாந்தங்கள் யாவற்றுக்கும் மூலம் சிவஞானபோதம். அது பிறக்க காரணமூர்த்தியாக இருந்தவர் மெய்கண்டார். அவர் திருவவதாரம் செய்ய உறுதுணையாக இருந்தது "பேய டையா பிரிவெய்தும்" என்ற இந்த தேவாரப் பாசுரம். இரண்டாம் திருமுறை – 48ம் பதிகத்தின் இரண்டாம் பாட்டு.

*(ஆசிரியரின் "திருமுறை மலர்கள்" நூலிருந்து இக்கட்டுரை பெறப்பட்டது)*

# வயலில் கிடைத்த விருந்து

**அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்து!**

2012ஆம் ஆண்டு நிறைவுற்று 2013ஆம் ஆண்டு பிறக்கப்போகிறது. உழவர் திருநாளாம் தைப்பொங்கலும் வரப் போகிறது. எல்லோரும் நல்லன எண்ணி நல்லனவே பெற்று நன்றாக வாழப் பிரார்த்தனை செய்வோம்.

உ.வே.சுவாமிநாத ஐயர் என்பவரைப் பற்றிப் படித்திருப்பீர்கள். மிகப் பழமையான ஏட்டுச்சுவடிகளைத் தேடித்தேடி எடுத்து, விளக்கத்துடன் நூலுருவில் அச்சிட்ட வர்களில் ஒருவர் "தமிழ்த்தாத்தா உ.வே.சா" என்பார்கள். இளம் வயதில் தமது ஆசிரியர் திரு. சுப்பிரமணியபிள்ளை அவர்களுடன் தங்கித் தமிழ் ஆய்வு செய்தவர் இவர். அப்படித் தங்கியிருந்த ஊர் "தாமிரவருணி" என்ற வளமான வயல்கள். அதிகாலை நேரத் தில் ஆற்றங்கரையில் உலாவுவது உ.வே.சா ஐயர் அவர்களின் வழக்கம். ஒருநாள் ஒரு வயல் வரப்பில் நடந்து கொண்டிருக்கிறார். அருகில் பெரிய கிணற்றில் இருவர் தண்ணீர் இறைக்கிறார்கள்.

(தூக்குக்காவடி பார்த்திருப்பீர்களே? காவடி மேலும் கீழுமாக ஆட மேலே நின்று ஒருவர் முன்னும் பின்னும் மிதித்து உதவுவாரே. அப்படி துலாவின் மேலே ஒருவர் நின்று முன்னும் பின்னும் நடக்க, கீடே நின்று ஒருவர் கிணற்றுள் இருந்து மாறி மாறி நீரள்ளவரும் வாளியைப் பிடித்துச் சரித்துக் கொண்டிரப்பார். நீர் வாய்க்கால் வழியே வயலுக்கு ஓடும். ஓரிருவர் நின்று மடைமாற்றுவார்கள். முற்காலத்தில் வயல், தோட்டத்திற்கு நீர் இறைப்பது இப்படித்தான்)

உ.வே.சா. ஐயர் நடந்தாரே. அவர் இப்படி இருவர் தண்ணீர் இறைப்பதைப் பார்த்தார். துலாவின் மேலே நின்றவர் களைப்புத் தெரியாமலிருக்க ஏதோ பாடுகிறார்.

"ஓட்டை கைக்கும் அத்தினத்திற்கும் காததூரம்.... ஆனாலும் நடக்குது சேலையாவாரம்....."

உரத்த குரலில் இராகம் போட்டுப் பாடப்பட்ட அந்தக் கிராமியப் பாட்டு உ.வே.சா. அவர்களை வெகுவாகக் கவர்ந்தது. பாடல் அவருக்குப் பாடமாகி விட்டது. ஆனால், அதன் கருத்து பிடிபட வில்லை. அதையே நினைத்தபடி வீடு திரும்பியவர், தம் ஆசிரியரிடம் இந்தப் பாட்டைச் சொன்னார், விளக்கம் கேட்டார். சுப்பிரமணியபிள்ளை புன்னகைத்தார். "நாளைக்கு அதே இடத்துக்குப் போய், அதே பாட்டுக்காறன் கிட்டே விளக்கத்தைக் கேட்டு வாருமேன்" என்று சொல்லிவிட்டார்.

மறுநாள், உ.வே.சா. அதே வயலுக்குப் போனார். அங்கே நேற்று நின்றவர்கள்

இன்றும் நின்றார்கள். ஐயர் அந்த விவசாயி கிட்டே போனார். வணக்கம் சொன்னார். அவரும் வணங்கினர். "ஐயா! நேற்று நீங்கள் பாடின பாட்டுக்கு என்ன அர்த்தம் என்று சொல்லுவீர்களா?" என்று பணிவோடு கேட்டார் உ.வே.சா. விவ சாயி திடுக்கிட்டுப்போனார். "எவ்வளவு பெரிய நீங்கள் என்னைக் கும்பிடலாமா!" என்று கூசிக் குறுகினார்.

"நீங்கள் பாடிய பாட்டு ரொம்ப நல்லா இருந்தது. அதனோட கருத்துக் கொஞ்சம் புரியவில்லை. தெரிஞ்சாச் சொல்லுங் கள்" என்று மீண்டும் கேட்டார் ஐயர்.

விவசாயி வெட்கத்தால் நெளிந்தார். "என்ன பாட்டுங்க அது?" என்று கேட்டார். ஐயர் பாடிக் காட்டினார்.

"ஓட்டை கைக்கும் அத்தினத்துக்கும் காததூரம்.... ஆனாலும் நடக்குது சேலையா வாரம்...."

விவசாயி மிகவும் கூச்சத்துடன்,

"ஆ... அதுங்களா.....? சரிங்க. 'ஓட்டை' என்றா என்னங்க என்று கேட்டார்.

"துவாரம்" என்றார் ஐயர். "அதே தாங்க, 'துவாரகை' கிருஷ்ணர் ஆட்சி செய்த இடம். அத்தினம் என்றா அத்தினாபுரம். துவாரகை எங்கேயோ இருக்கு. அத்தினாபுரம் எங்கேயோ இருக்கு. இடையில ரொம்பத் தூரமில்லிங்களா?"

"ஆமாமாம்" இது ஐயர்.

அப்படிக் காத தூரத்தில இருந்தாலும் அத்தினாபுரத்து ராசபையில பாண்டவர் சூதாடித் தோத்துப் போனதும் பாஞ்சாலியை இழுத்துவந்து சபைநடுவுல மானபங்கப் படுத்த துச்சாதனனை ஏவினாங்க இல்லையா கௌரவர்? அந்த நேரம் "கிருஷ்ணா கிருஷ்ணா!" நீயே கதி! என்று பாஞ்சாலி கதற, உடனே மலைமலையா சீலையை அனுப்பிவிட்டாரே கிருஷ்ணன்? அதைத் தாங்க நம்ம பக்கம் இப்படிப் பாடுறது வழக்கம்...." என்று கும்பிட்டபடி கூறி முடித்தார் விவசாயி. கிருஷ்ணனை சேலை வியாபாரி ஆக்கிவிட்ட அக்கிராமியப் பாடலின் நயத்தை வியந்தபடி, மகாபார தத்தில் வரும் "திரௌபதி சபை நடுவில் அபயம் கேட்க, அவளது சேலை வளர்ந்து வளர்ந்து மலைபோல் குவிந்ததையும், துச்சாதனன் களைத்து மயங்கி வீழ்ந்த தையும், சபையோர் தலைகுனிந்து நின்றதையும் மனக்கண்ணில் கண்டு மகிழ்ந்தபடி நடந்தர் உ.வே.சா. ஐயர்.

# சபாபதி நாவலர்

சிவபூமி என்று திருமூலராலே பாடப் பெற்ற இலங்கையின் வடபாகத்திலே யாழ்ப்பாணத்து வடகோவையில் சைவ வேளாண் மரபில் கல்வி அறிவு ஒழுக்கங் களில் சிறந்த சுயம்புநாதபிள்ளை எனும் சிவபக்தர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் தெய்வயானை. அவர்களின் இல்லறத்தின் நற்றவப் பயனாய் சாலி வாகன சபாப்தம் (1766(1846)இல் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சபாபதி என்று பெற்றோர் நாமகரணம் செய்தனர்.

அவர் தாய் தந்தையர் உரிய பரு வத்திலே சபாபதிக்கு விதிப்படி வித்தி யாரம்பஞ் செய்து வைத்தனர். அக்காலத்து வடகோவையம்பதியில் வடமொழி தென் மொழிக் கல்வியிற் சிறந்த பிரமஸ்ரீ ஜெகந்நாதையர்பால் ஆரம்பக்கல்வி பயின்ற சபாபதி பிறகு சமஸ்கிருதம், தமிழ் இரண்டிலும் பெரும்புலமை வாய்ந்த நீர்வேலி சிவசங்கரபண்டிதரிடம் வடமொழி, தென்மொழி இரண்டையும் கற்றுத் தேறினார். ஆங்கில பாசையும் சிலகாலம் கற்று அம்மொழியிலும் விற்பத்தியுடை யராயினர். செந்தமிழ்ப்புலமை தலைமை பூணும் பெரு நோக்கத்தோடு கலைபயின்று வரும் நாளில் குன்ம நோய் இவரைப் பிடித்துக் கொண்டது. வைத்தியத்தினாலும் அது தீர்ந்திலது. உணவுதானும் ஏற்றுக் கொள்ளக்கூடாத அளவு நோய் அதி கரித்துத் துன்பத்தைக் கொடுத்தது. 'இந் நோயினால் வருந்தி வாணாள் வீணாள் ஆவதிலும் உயிர் விடுதல் நன்று. அதிலும் சிவ சந்நிதானத்தில் உபவாசமிருந்து உயிர் துறத்தல் மிகவும் நன்று" என தீர்மானித்து உடனே நல்லூர் கந்தசுவாமி கோயிலை யடைந்து முருகப் பெருமானை வணங்கி புண்ணிய புராண முழுமுதல்வரான சண்முகநாதனே! சுப்பிரமணிய சுவாமீ! தமியோனைப் பற்றிய இந்நோய் தீர்ந்து அடிமை கொண்டருளவேண்டும்" என்று பிரார்த்தித்து, கந்தபுராண தோத்திரப் பாக்கள், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, கந்தர் கலிவெண்பா, திருப்புகழ் என்னும் திவ்விய பிரபந்தங்களைப் பாராயணஞ் செய்து கொண்டு அங்கு சிலகாலம் இருந்தார்.

இவ்வாறு ஒரு மண்டலத்துக்கு மேல் அரிய உபவாசம் அநுட்டித்து வரும்போது ஒருநாளிரவு சொப்பனத்தில் அர்ச்சகர் பாயாசங் கொடுத்தருளப் பெற்றுக் கொண்டு ஆனந்த பரவசராய்த் துதி யெடுத்து

**அந்தமி லொளியின் சீரா லறுமுகம் படைத்த**
**பண்பால்**
**எந்தைகண் ணின்றும் வந்த வியற்கையாற்**
**சத்தியாம்பேர்**
**தந்திடும் பனுவல் பெற்ற தன்மையாற் றனிவேற்**
**பெம்மான்**
**கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை**
**நீத்தோம்**

எனப் பலவாறு திருவருளின் திறத்தை வியந்து கந்தவேள் திருவடிப்பற்று மேன் மேலும் ஓங்கி வளர அப்பெருமான் இன்ன ருள் பழுத்த சந்நிதானத்தில் சிலபகல் தொண்டு செய்து வந்தார். நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம் இவர் செய்த

பிரபந்தங்களில் ஒன்றாகும். அது சுப்பிர மணியக் கடவுள் திருவிளையாடலை விளக்குவது. குருநாதனாம் முருகப்பெரு மான் இவரது உபசனாமூர்த்தியாம். இவர் செய்த நூல்களில் சுப்பிரமணியப் பெரு மானுக்கு பாடிய வணக்கச் செய்யுட்கள் இதனை விளக்கும்.

**கற்பக நாட்டும் வைவேற் கந்தவே டுணைவின் னோர்க்குக்**
**கற்பக நாட்டில் வாழ்வு கண்டவ விடுவ சேனன்**
**கற்பக நாட்டி யத்திற் காதல வென்னிற் றில்லைக்**
**கற்பக நாட்டின் றேகுஞ் சமன்வலி கடப்பிக் கும்மே.**

இது இவரியற்றிய சிதம்பர சபாநாத புராணத்தில் வரும் காப்புச் செய்யுள்.

சபாபதி நாவலர் அவர்கள் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆறு முகநாவலர் அவர்கள் விரும்பியபடி சில காலம் தலைமைத் தமிழ்ப் போதகாசிரிய ராக அமர்ந்திருந்து அந்த வித்தியாலயத்தை அந்நாளில் நடைபெறச் செய்தார்.

## அருளுபதேசம் பெற்றமை

இவர் பின்னர் திருவாவடுதுறையை அடைந்து அவ்வாதீனத்து பதினாறாவது மகாசந்நிதானமாய் விளங்கிய ஸ்ரீ சுப்பிர மணிய தேசிக சுவாமிகள் அருளுபதேசம் பெற்று அவர்கள் முன்னிலையில் 12 வருட காலம் ஞானநூல்களையெல்லாம் மரபாற் கற்று வல்லராய் இலக்கிய, இலக்கண, தர்க்க, வேதாந்த, சித்தாந்த சாகரமாய் அவ்வாதீன வித்துவசிகாமணியாய் விளங்கி மிக்க புகழும் தக்க வரிசையும் பெற்றார்.

## நாவலர் பட்டம்

அவையோர் வியக்கச் சொல்லும் உரைவன்மையினையும், நிகழ்த்தும் சைவப்பிரசங்கப் பிரவாக மகிமையினை யும், மாயாவதி முதலிய குதர்க்கர்களும் பிறரும் நாவடங்கச் செய்யும் நியாய வாதச் சொற்போர் வென்றினையும் குறித்துச் சுப்பிரமணிய யோகீந்திரர் இவருக்கு 'நாவலர்' என்னும் பட்டத்தினை மனமகிழ்ந்து அளித்தார். ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் அதனை ஆசீர்வதித்தருளி னார்கள்.

## செய்த நூல்கள்

### சிதம்பர சபாநாத புராணம்

சபாபதி நாவலர் அவர்கள் சிதம்பரத்தை தம் வாசஸ்தலமாகக் கொண்டு வசித்துவரும் நாளில் பல தல புராணங்களை ஆராய்ந் தார்கள். அதன் பயனாக அவர் சிதம்பர சபாநாத புராணம் என்னும் நூலைப் பாடினார்கள். இது சிதம்பர மான்மியம் ஐந்தினுள் ஒன்றான ஏமசபாநாதமான்மி யத்தின் மொழி பெயர்ப்பாயுள்ளது. 893 செய்யுட்கள் கொண்ட இந்நூல் 1885இல் வெளியிடப்பட்டது. இப்புராணத்திலே திரு நாட்டுப்படலம், பிச்சாடனப்படலம், தேவ தாருவனப் படலம், அனந்தப்படலம், புண்ட ரீகப்படலம், வியாக்ரபாதப்படலம், திரு நடனப்படலம், ஏமவன்மப்படலம், தீர்த்த விசேடப்படலம், யாத்திரோற்சவப் படலம் ஆகிய படலங்கள் காணப்படுகின்றன. இப் புராணத்துக் காப்புச்செய்யுள் வருமாறு –

**ஞானமிக வளரினஃ றிணையவுயர் திணையாகு நவிலஞ்ஞான**
**வீனமிக வளரினுயர் திணையவஃ றிணையாகு மென்று தேற்றன்**
**மானவஃறிணைமேலு மாண்டவுயர் திணைகீழும் வடிவிறகாட்டித்**
**தேனமரும் பொழிற்றில்லைச் சிகரி வாழ் கற்பகத்தை வணக்கஞ் செய்வாம்.**

**சிவகர்ணாமிர்தம்**

அப்பய தீக்ஷித யோகிகள் வடமொழியில் செய்த சிவகர்ணாமிர்தத்தின் மொழி பெயர்ப்பாய் வசனகிரந்தத்தில் சபாபதி நாவலர் அவர்கள் சிவகர்ணாமிர்தம் என்ற நூலைச் செய்தார். இந்நூல் பூர்வபக்கம், சிந்தாந்தமென இருபகுதியாய் சிவபரத்துவத்தை சொல்லுகின்றது. இந்நூலை திருப்பனந்தாட்காசி மடாதிபதி ஸ்ரீமத் குமார சுவாமிச் சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி நாவலரவர்கள் இயற்றி 1885 ஆவணியில் வெளியிட்டனர்.

**சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்**

இந்நூலைப் போலவே வடமொழியில் அரதத்தாசாரியர் இயற்றிய சதுர்வேத தாற்பரிய சங்கிரக மொழிபெயர்ப்பாய் வசன கிரந்தத்தில் சபாபதிநாவலர் அவர்கள் சதுர்வேத தாற்பரிய சங்கிரத்தை செய்தார். இந்நூல் பரமசிவனே நான்கு வேதங்களாலும் எடுத்தோதப்படும் பரம்பொருள் என்று சாதிக்கின்றது. நாவலரவர்கள் இதன் முதற்பதிப்பை தாது வருடம் சித்திரையிலும் இரண்டாம் பதிப்பை சர்வசித்து வருடம் வைகாசியிலும் (1887) வெளியிட்டனர். இந்நூல் இரத்தாட்சி வருடம் ஆவணியில் (1924) மூன்றாம் பதிப்பாக வெளியிட்டனர். கழகப் பதிப்புரையில் இந்நூலின் மகிமையை கூறுமிடத்தில் வரும் விசேட குறிப்பு வருமாறு–

"இத்துணைச் சிறப்பு வாய்ந்த அந்நூல் வடமொழியில் இருத்தலின் அஃது அம்மொழிவல்லார்க்கே பயன்படுவதாகின்றது. வடமொழிக் கல்வி அருகிவரும் கால நிலையை கருதி அந்நூலைப் பல்லோர் தமிழில் மொழிபெயர்த்தார்கள். அவற்றுளெல்லாம் சிறந்ததும், முதனூற்பொருளைத் தெளிவு பெற விளக்கி தமிழ்ச்சுவை ததும்பி நிற்பதும், திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவானாய் இருந்த யாழ்ப்பாணம் வடகோவைச் சபாபதி நாவலரவர்கள் செய்த மொழிபெயர்ப்பே..."

**பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம்**

சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் போன்றே வடமொழியில் அப்பய தீக்ஷித யோகிகள் இயற்றிய பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம் என்பனவும் இவராற் தமிழில் செய்யப்பட்டன. பாரதத்தாலும், இராமாயணத்தாலும் நுதலப்படும் பரம்பொருள் பரமசிவனென்று இவை அறிவுறுத்துவன. இந்நூல்களை நாவலரவர்கள் தாரண வருடம் (1884) இல் வெளியிட்டார்.

**யேசுமத சங்கற்ப நிராகரணம்**

இந்நூல் யேசு மதத்தார் கொள்கை பூர்வபக்கமாதலைத் தருக்கத்தினாற் றெரிப்பது. இந்நூலுக்கு சிறப்புப் பாயிரமளித்த சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் சிறப்புப் பாயிரம் வருமாறு –

**சைவமாகிய தாமரைத் தடமொளி தழைப்பப்**
**பொய்வரும் விவிலிய கயிரவம் பொலிவிழுப்ப**
**மெய்வரும் புலவோரளிகூட்டுண விவனூல்**
**தெய்வஞா யிறொன் றெழுந்தெனத் திகழ்ந்ததை யன்றோ.**

நாவலரவர்கள் 168 செய்யுள்கள் கொண்ட இந்நூலினை பிரமாதி வருடம் (1879) இல் இயற்றினார். அதனைச் சித்திரபானு வருடம் (1882) வைகாசியில் நல்லூர் கைலாசபிள்ளை வெளியிட்டனர்.

#### இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு

இஃது இலக்கண விளக்கச் சூறாவளியின் மேல் சிலர் நிகழ்த்திய பழியை மறுத்து அதன் சிறப்பைக் கூறும் வசனநூல்.

#### வைதிக காவிய தூஷண மறுப்பு

இது பெரிய புராணம், இராமாயணம், தணிகைப் புராணம் என்னும் வைதிக காவியங்களை புறக்கணித்துச் சிந்தா மணி என்னும் அவைதிக காவியம் பாராட்டினாரை நியாயத்தினால் மறுத்து வைதிக காவிய மாட்சிநிலை நாட்டும் வசனகிரந்தம்

#### ஞானசூடாமணி

இது சிரவணமாதி நான்கும் பராபர ஞானமாய் அடங்குமாறு நிரூபிப்பது. இந்நூலின் இரண்டாம் பதிப்பு துறைசை யாதீனம் 19ம் வெளியீடாக வந்துள்ளது.

#### ஞானாமிர்தம்

இது சமயங்களெல்லாம் முழுமுதற் கடவுள் ஒருவன் ஆணையிற்றோன்றி அதிகாரி பேதம் பற்றித் தாரதம்மிய முற்று நிற்கும் முறைமையுணர்த்தும் வசன கிரந்தம். இந்நூல் கோலாலம்பூர் சைவ சித்தாந்த சங்கத்தின் முதல் வெளியீடாக அக்ஷய வருடம் கார்த்திகை மாதம் (1926) பதிப்பிக்கப்பட்டது.

#### திருச்சிற்றம்பல யமகவந்தாதி

#### திருவிடை மருதூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி

மத்தியார்ச்சுனம் என்று சொல்லப் படும் திருவிடைமருதூர்க்குச் சென்று மகாலிங்கப் பெருமான் நன்முலை நாயகியை வணங்கி இப்பிரபந்தத்தை பாடினார் இதன் காப்புச் செய்யுள் வருமாறு –

**மதிவளரு மணிமாட வரிசைதிகழ் தருமருத**
**பதிவளர்மா லிங்கசேர் பதமலரி னணிபாக்குத்**
**துதிவருளம் பதிற்றுப் தந்தாதி தொடுக்கமத**
**நதிவளருங் கரடகய முகப்பெருமா னடிநயப்பாம்.**

இந்நூலின் இரண்டாம் பதிப்பு துறைசை ஆதீன வித்துவான் பார்வையில் திருவிடை மருதூர்க்கோயில் அதிகாரியாரால் 1952 இல் வெளியிடப்பட்டுள்ளது.

#### மாவையந்தாதி

**சிதம்பர பாண்டிய நாயக மும்மணிக் கோவை**
**வடகோவைச் செல்வ விநாயகர் இரட்டை மணிமாலை**
**நல்லைச் சுப்பிரமணியக்கடவுள் பதிகம்**
**வதிரிநகர்த் தண்டபாணிக் கடவுள் பதிகம்**
**புறவார்பனங்காட்டூர்ப் புறவம்மை பதிகம்**
**சிவஞானயோகிகள் குருபூசைமகோற்சவம்**

#### திராவிடப் பிரகாசிகை

திராவிடப் பிரகாசிகையின் சிறப்புப் பாயிரத்தில் சபாபதி நாவலர் அவர்கள், "தமிழின் தொன்மை மரபினையும், அதனி லக்கண மரபினையும், அதனிலக்கிய மரபினையும், சாத்திரமரபினையும், நல்லாசிரியர் வழிநின்று தெளிதரற்குரிய நற்றவ அறிவு மாட்சியுடையரல்லாதார் சிலர் இக்காலத்துத் தாம் தாம் அறிந்த வற்றால் முறை பிறழக் கொண்டு தமிழ் மொழியினும் பிறமொழியினும் பலவா றெழுதி வெளியிட்டு வரம்பழித்தானும் அவர் உரையின் பொய்ம்மை தேற மாட்டாத பேதைநீரார் அவற்றினை மெய்யெனக் கொண்டு தமிழ் நல்லாசிரியர் தெய்வப் புலமை மாட்சியினையும், அவர் நூலுரைகளின் தாரதம்மிய முறையினும் வரன்முறை போற்றாது புறம்பழித்துத் தமக்கும் பிறர்க்குங் கேடுசூழதலானுந்

தமிழுலகமற்றவற்றின் உண்மை தேறி உறுதிப்பயன் எய்துதற்பொருட்டு அத்திற னெல்லாம் விளக்கித் திராவிடப்பிர காசிகை என்னும் பெயரினால் இவ்வசன கிரந்தம் இயற்றுவோமாயினோம்."

தமிழ் இலக்கிய இலக்கண சாத்திர மெய்வரலாறுகளை எல்லாம் இனிதுபட எடுத்துப் போதிப்பது இத்திராவிடப் பிரகாசிகை. அருந்தமிழறிஞரால் மருந் தெனப் போற்றப்படும் இந்நூலை நாவல ரவர்கள் தமது சித்தாந்த வித்தியா நுபாலன அச்சியந்திரசாலையில் சாலி வாகனம் 1821ல் செல்லாநின்ற விகாரி வருடம் கார்த்தியில் (1899) பதிப்பித்து வெளியிட்டார்.

**பத்திரிகைகள் வெளியிட்டது**

சபாபதி நாவலர் அவர்கள் 1891 இல் சென்னையில் நடாத்தி வந்த சித்தாந்த வித்தியா நுபாலன அச்சியந்திரசாலை யைச் சிதம்பரத்தில் புதிதாக ஸ்தாபித்து ஞானாமிர்த பத்திரிகையை நடாத்தி வந்தனர். அப்பத்திரிகை அரிய நூன் முறையாக நடைபெற்று வந்தது. "பிரம வித்தியா" பத்திராதிபர் தமது 2ம் புத்தகம் 12ம் பத்திரிகையில் "ஞானாமிர்தம் என்னுமோர் அமிர்தம். புத்தி என்னும் மந்திரத்தாற்கடைய ஓர் நாவலர் என்னும் திருப்பாற் கடலிற் பிறந்து உலாவுகின்றது. இப்பத்திரிகை உதித்து இத்தென்னாட்டை அலங்கரிப்பது எமக்குப்பரமானந்தமே. பத்திரிகாசிரியர் நற்றமிழ் கடந்த நாவலர். ஆரிய பாஷையின் வரன்முறை அறிவார்" என வியந்துகொண்டாடினார்.

மேலும் சபாபதி நாவலர் அவர்கள் சதேசவர்த்தமானி என்னும் மாதப் பத்திரி கையைத் தொடங்கிச் சிலகாலம் நடாத்தி னார். சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலையில் பல நூல்களும் வெளியிடப்பெற்று வந்தன.

**சிவனடி சேர்ந்தது**

சபாபதி நாவலர் அவர்கள் சிதம்ப ரத்தில் தங்கியிருக்கும் கால் 1903ம் வருடம் தனது 58வது வயதில் இறை வனடி சேர்ந்தார்.

**நீண்டுயர் சோலை வடகோவை நற்பதி மேவுதமிழ்**
**மாண்புடைச் சைவன் சபாபதி நாவலன் வான்சிறப்ப**
**ஆண்டுயர் சோபகிரு தானிமாத மமரபக்கம்**
**வேண்டியபஞ்சமி வான்பதம் புக்கான் விருந்துகந்தே.**

*நன்றி*

**யாழ்ப்பாணம் இணையதளம்**

## எங்கும் நம்மோடு வருவது

*வேறு ஊருக்குக் குடிமாறிப் போகும் போது நீ தேடிய பொருளை உடன் கொண்டு போகின்றாயன்றோ! இந்த உடம்பைவிட்டு நீ புறப்படும்போது உன் செல்வம் உன்னுடன் வரவேண்டாமா? வரவேண்டுமானால் தருமஞ் செய். "எங்காயினும் வரும் ஏற்றவர்க்கு இட்டது". பூசை செய்யும் நேரம் உன்னுடைய நேரம்; தருமஞ் செய்த பணம் உன்னுடையது. நீ செய்த அறம் கட்டமுது போல் உனது பெரிய யாத்திரையில் இனிது உதவும்.*

**- சைவ நற்சிந்தனை**

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**200 ஆண்டுகள் பழமையான கோவில் புனரமைப்பு**

யாழ்ப்பாணம் கோட்டை வளாகத்தினுள் அழிந்து போயிருந்த வயிரவர் கோவில் மீளவும் கட்டப்பட்டு விசேட வழிபாடு நடை பெற்று வருகிறது. தொல்லியல் திணைக்கள மும் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களும் இக் கோவில் புனரமைப்பில் பெரிதும் அக்கறை யுடன் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**கந்தரோடை வற்றாக்கை அம்மன் கோவிலில் விக்கிரகங்கள் திருட்டு**

மிகப்பழமை வாய்ந்த எழுந்தருளி விக்கிரகம் உட்படப் பல லட்சம் ரூபா பெறுமதியான விக்கிரகங்கள் இவ்வால யத்தில் திருட்டுப் போனது குறித்து ஆலய தர்மகர்த்தா பொலிசில் முறையிட்டுள்ளார்.

**சுன்னாகம் வரியப்புலம் அம்மனுக்கு இராஜகோபுரம்**

சுன்னாகம் வரியப்புலம் மகாமாரி அம்மன் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பல்வேறு திருப்பணிகள் நடைபெற்று வருகிறது. இந்திய சிற்ப வித்தகர் புரு ஷோத்தமன் அவர்களின் கைவண்ணத்தில் இராஜகோபுரம் உட்படப் பல திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**சைவபரிபாலன சபையின் புதிய தலைவர்**

இலங்கை சைவபரிபாலன சபையின் புதிய தலைவராக சைவப்புலவர் திரு.மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு பதவியேற்றுள்ளார்.

**பிரசங்கபூஷணம் தொல்புரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி**

சிறந்த சமயச் சொற்பொழிவாளரும், தமிழ் அறிஞருமாகிய தொல்புரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி (B.A. Dip in Ed) ஐயா அவர்கள் 26.11.2012 அன்று காலமானார். இலங்கையிலும் மலேசியா, சிங்கப்பூர், இலண்டன் போன்ற நாடு களிலும் கதாப்பிரசங்கம் பல செய்த இப்பெரியார் சைவ சமய பாட முதன்மை ஆசிரியராக விளங்கி இளைப்பாறியவர். 73 வயது நிரம்பிய அன்னாரது பிரிவு குறித்து பலரும் அஞ்சலி செலுத்தினர்.

**மட்டக்களப்பில் நாவலர் மகாநாடு**

நல்லைநகர் நாவலர் பெருமானின் குரு பூசையை முன்னிட்டு எதிர்வரும் டிசம்பர் 9, 10 இருநாள்களும் மட்டக்களப்பு இந்து மன்றங்களின் ஏற்பாட்டில் சைவ மகாநாடு நடைபெறவுள்ளது. பல சமயப் பெரியர்கள், பிரமுகர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் சைவமகாநாடு சிறப்பாக நடைபெற்றது**

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் சென்ற மாதம் சைவமகாநாடு சிறப்பாக நடைபெற்றது. நல்லை ஆதீன முதல்வர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், திரு. கந்தையா நீலகண்டன், அகளங்கன் தமிழருவி, த.சிவ குமார், உட்படப் பலரும் உரையாற்றினர்.

**பரமேஸ்வராக் கல்லூரி மீளவும்**

திருநெல்வேலி சைவத்தமிழ்க் கலவன் பாடசாலை பரமேஸ்வரா வித்தியாலயம்

எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புகழ்பூத்த பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக் கழகமாக மாறியபோதுபலரும் வருத்தம் தெரிவித்தனர். 38 ஆண்டுகளுக்குப் பின் பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், திருநெல்வேலிச் சமூகம் அதிபர் ந.விஜயசுந்தரம் (திருநெல்வேலி சைவத் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரது கடும் முயற்சியால் மீளவும் பரமேஸ்வரா உதய மாகியுள்ளது. பரமேஸ்வராக் கல்லூரிக்கு சேர் பொன். இராமநாதன் எழுதிய சொத்துக்கள் இப்பாடசாலைக்குக் கிடைக்க அனைத்துத் தரப்பினரும் ஏற்பாடு செய்யு மாறு பலரும் கருத்துத் தெரிவித்தனர். விரைவில் இப்பாடசாலை கல்லூரியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அதன் சொத்துக்கள் பாதுகாக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**இராமநாதன் கல்லூரியின் நூற்றாண்டுவிழா**

சேர். பொன் இராமநாதன் அவர்களால் 1913ம் அண்டு ஸ்தாபிக்கப்பட்ட மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியின் நூற்றாண்டு விழா 2013ம் ஆண்டு முழுவதும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை நடாத்திச் சிறப்பிப் பதற்கு கல்லூரி அதிபர் தலைமையில் நூற்றாண்டு விழாக்குழு அமைக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கல்லூரி பழைய மாணவர்கள், அபிமானிகளின் ஆதரவுடன் நூற்றாண்டுவிழாச் சிறப்பு மலர் வெளியிடப்படவுள்ளது.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இந்து இளைஞர் மன்றத்தின் பவளவிழா**

யாழ் இந்துக் கல்லூரியில் இந்து இளைஞர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவது குறித்து சிறப்புமலர் வெளியிடத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஆக்கபூர்வமான கட்டுரைகள் அனுப்பிவைக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

**கலாபூஷணம் பண்டிதர் சைவப்புலவர் சிறீரங்கம் அப்புத்துரை கனடாவில் காலமானார்**

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதர் சி. அப்புத்துரை ஐயா அவர்கள் 11.10.2012 அன்று கனடாவில் காலமானார். 23.04.1928இல் பிறந்த இவர் இளவாலை மெய்கண்டான், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கற்று 1954 முதல் ஆசிரியராக, அதிபராகச் சிறந்த சேவை யாற்றியவர். 1971 முதல் அதிபர் பணியில் சிறந்த இவர் இறுதியில் மயிலிட்டி கலைமகள் வித்தியாலய அதிபராக விளங்கி ஓய்வு பெற்றவர். தெல்லிப்பழை கலை இலக்கி யக்கள இயல்குழுத் தலைவராக விளங்கிய இவர் 54 நூல்களைப் பதிப்பித்த பெரு மைக்குரியவர். இவர் ஆராய்ந்த வெளியிட்ட ஈழத்து தமிழ்ப்புலவர்களின் வரலாற்று நூல் மிகவும் பிரசித்தமானது.


**இணுவில் கந்தசாமி கோவில் பாலஸ்தாபனம்**

மிகப்பழமை வாய்ந்த இணுவில் கந்த சாமி கோவில் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கவுள்ளதால் 25.11.2012 பாலஸ் தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உட்பிரகார கூரை வேலைகள் யாவும் புதிய வடிவத்தில் உருவாக்கத் திட்ட மிடப்பட்டு வேலைகள் தொடங்கி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆயுள்வேத வைத்தியசாலை**

கீரிமலை சிவபூமி மடத்தில் வெள்ளி தோறும் இலவச நடமாடும் வைத்திய சேவை நடைபெற்று வருகிறது. பலரும் பயன்பெற்று வருகிறார்கள்.

# அகவை நூறு நிறைவு காணும்
# பெரியாரை வாழ்த்துகிறோம்




**தெல்லிப்பழை ஸ்ரீமான் உயர்திரு பொன்னையா செல்லப்பா அவர்கள்**
**( இளைப்பாறிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் )**

பண்பான வாழ்வால் பலகாலம் வாழும்
பயன் பெற்ற பெரியீரே
காலந்தவறாத கடமை, கடவுள் வழிபாடு
கருணைமிகு செயல்கள் கனதியான அனுபவங்கள்
நூற்றாண்டிலும் நுண்மதியோடும்
நூல்களைப் படிக்கும் அகப்புறப் பார்வை
எவருக்குத்தான் கிடைக்கும்
எந்தையே வாழ்க பல்லாண்டு!


**நிர்வாக சபை**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**


## சிலாபம் முன்னேஸ்வர சிவாலய தோற்றங்கள்

















கந்தஷஷ்டி காலத்தில் சந்நிதி ஆலயம்



ANDRA DIGITAL PRINTERS T.P: 021 222 8929